தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 40

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 2

(வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி -1)

அட்டைப்படம்

முன் அட்டை : வரதராஜப் பெருமாள் கோயில்
மேற்கு வாயிற் கோபுரம் (உட்புறம்)

பின் அட்டை : வரதராஜப் பெருமாள் கோயில்
பொதுத் தோற்றம்

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 2

(வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி -1)

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

இரா. சிவானந்தம்

கி. சு. சம்பத்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Kanchipuram Mavattak Kalvettukal Vol.2**
General Editor	:	Principal Secretary and Commissinor
Editors	:	R. Sivanantham & K.S. Sampth
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	EPIGRAPHY
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	236
Year	:	2011
No. of Copies	:	1000
Type Point	:	12
No. of Pages	:	373
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	The Chennai Printer's Industrial Co-op. Society Ltd. 6, Pycrofts Road, Triplicane, Chennai-5
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 118/-

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை-600 008.
நாள்:09.02.2011

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டிலிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 25,000 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு, இவற்றில் இதுவரை 23,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் 2004- ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2010 வரை சுமார் 14,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை படியெடுக்கப்பட்ட 23,500 கல்வெட்டுகளில் 5600 கல்வெட்டுகள் 39 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I என்னும் நூல் ஏற்கனவே இத்துறையால் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-II என்னும் இந்நூலினை வெளியிட திட்டமிடப்பட்டது. மத்திய தொல்லியல் துறையால் 1919-ஆம் படியெடுத்துப் படிக்கப்பட்ட பிரதிகளை கொடுத்துதவிய புதுதில்லி, மத்திய அரசு தொல்லியல் துறை பொது இயக்குநர் முனைவர் கௌதம் சென் குப்தா அவர்களுக்கும், மைசூர் கல்வெட்டுப் பிரிவு இயக்குநர் முனைவர் டி. எஸ். இரவிசங்கர், கல்வெட்டு துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சு. சுவாமிநாதன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இக்கல்வெட்டுகளை படித்து பதிப்பித்து நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு இரா. சிவானந்தம், திரு கி.சு. சம்பத் ஆகியோருக்கு எனது பாராட்டுகள், இந்நூலினை D.T.P. செய்த இத்துறை அச்சுப்பிரிவு பணியாளர்கள் திருமதி கோ. கீதா, திருமதி தே. சத்தியவதி, திருமதி ச. சரஸ்வதி, திரு மு. சக்திவேல், திருமதி கு. கோகிலா ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

2010-2011- ஆம் நிதியாண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் இந்நூலினை வெளியிட அனுமதியளித்து, நிதியுதவி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும் பெரு முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வரலாற்று அடிப்படைச் சான்றுகளை ஆய்வாளர்களும், ஆர்வாளர்களும் பயன்படுத்தி தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளை உலகளவில் எடுத்துரைக்க வேண்டும் என்பதே என் ஆவல்.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

முன்னுரை

காஞ்சிபுரம் 12°50' வட அட்சரேகையிலும் 79°40' கிழக்கு தீர்க்க ரேகையிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 250மீ உயரத்தில் உள்ளது. சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள காஞ்சிபுரம் நகரம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகரமாகவும் திகழ்கிறது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் தென்னிந்திய அரசியல் மற்றும் சமுதாய வரலாற்றில் முக்கிய நகரமாக திகழ்ந்து வருகின்றது.

காஞ்சியின் வரலாறு சங்ககாலம் தொட்டு சிறப்புற்று விளங்கி வருகின்றது. சங்க காலத்தை அடுத்து தென்னிந்தியாவின் பழமையான அரசான பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது. காஞ்சியில் வழிபாட்டு முறையினையை வைத்து சிவ காஞ்சி, வைணவ காஞ்சி, சமணக் காஞ்சி என்றழைப்பர். வேகவதி மற்றும் பாலாறு ஆகிய இரு ஆறுகளுக்கிடையே சிவ காஞ்சியும், வைணவ காஞ்சியும் அமைந்துள்ளன. அதே போல் சமணக் காஞ்சி (ஜினக் காஞ்சி) வேகவதி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம், தொண்டை மண்டலத்தின் நிர்வாகப் பிரிவுத் தலைமையிடமாகத் திகழ்ந்ததை சங்க இலக்கிய நூல்கள் மற்றும் இப்பகுதி கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்நகரம் கச்சி, கச்சிப்பேடு, காஞ்சி, காஞ்சிநகர், காஞ்சி மாநகர் என்ற பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கிய நூல்கள் இந்நகரினை 'கச்சி' என்றழைப்பதே மிகப் பழமையானதாகும். இதன் பின்னர் 'காஞ்சி' என்ற பெயர் பெற்றது. 'காஞ்சி' மரம் சூழ்ந்த இடமாதலால் இப்பெயர் பெற்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வைணவ காஞ்சிப் பகுதி சின்னகாஞ்சிபுரம் என்றும், சிவ காஞ்சி பெரிய காஞ்சிபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. அருளாளப் பெருமாள் கோயில் அமைந்துள்ள வைணவக் காஞ்சி, காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகவும், இப்பகுதியினை அத்தியூர் மற்றும் திருஅத்தியூர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டதை இப்பகுதி கல்வெட்டுகள் பகர்கின்றன. 'அத்தி' மரங்கள் நிறைந்திருந்த பகுதி என்பதால் 'அத்தியூர்' என்ற பெயர் பெற்றது. அத்தியூரில் உள்ள குன்றுப் பகுதியில் தான் அருளாளப் பெருமாள் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே 'அத்திகிரி' என்றழைக்கப்பட்ட இவ்வூர் 'ஹஸ்திகிரி' 'ஹஸ்திபுர' என்று வடமொழிப்படுத்தப்பட்டது. 'யானை மலை' 'யானை நகரம்' என்பது இவற்றின் பொருள்களாகும். இக்கோயில் இறைவனை 'அத்தியூர் ஆழ்வார்'|, 'அத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாள், 'அத்திவரதர்' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டதை இக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயில் இறைவனைப் பற்றிய முதல் குறிப்பு பல்லவர் காலத்தில் வாழ்ந்த முதல் மூன்று ஆழ்வார்களான பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இம்மூவரில் பூதத்தாழ்வார் பாடிய 'திருவந்தாதி'யில் காணப்படுகிறது. எனவே பல்லவர் காலத்தில் 'அத்தியூர் அருளாளப் பெருமாள்' கோயில் இருந்துள்ளதை அறிய முடிகிறது. அக்கோயில் எவ்வகையில் அமைக்கப்பட்டிருந்ததை அறிந்து கொள்ள இயலவில்லை ஏனெனில் அக்கால கட்டப்பகுதிகள் இங்கு காணப்படவில்லை.

ஆனால் பல்லவர் கால கட்டட அமைதியுடன் கூடிய மணற்கல்லால் ஆன இரு தூண்கள் குளத்தின் உள்ளிருந்தும் சுதர்சன சன்னதியின் அருகிலிந்தும் கண்டறியப்பட்டன. இத்தூண்கள் மட்டுமே பல்லவர்கால கோயிலின் எச்சங்களாகக் கிடைக்கின்றன.

இக்கோயிலில் மொத்தம் 360 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் காலாத்தால் முந்தையது முதலாம் இராசாதிராசனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1050) கல்வெட்டாகும். இக்கோயில் அருளாளப்பெருமாள் கோயில் கருவறை, அர்த்தமண்டபம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கட்டடக் கலைப் பாணியில் உள்ளது. எனவே இக்கோயில் கி.பி. 1050- ஆம் ஆண்டுக்கு முன்னர் சோழர் காலத்தில் இக்கோயில் கருவறை அர்த்தமண்டபம் ஆகியவை முதலில் கருங்கற்களால் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அதன் பின்னர் ஏனைய திருச்சுற்றுகள், சன்னதிகள், மண்டபங்கள் விரிவாக்கம் அடைந்தன.

இக்கோயிலில் உள்ள 360 கல்வெட்டுகளில் விஜய நகரர் காலத்துக்கு முந்தைய காலக் கல்வெட்டுகள் 190 கல்வெட்டுகள் மட்டுமே இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. மீதியுள்ள 170 கல்வெட்டுகள் காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -III (காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி-II) என்னும் நூலில் இடம் பெறும். இத்தொகுதியில் சோழர், பாண்டியர், ஹொய்சளர், காகதீயர் போன்ற அரசுகளின் கல்வெட்டுகளும், இவ்வரசுகளின் காலத்திலிருந்த சிற்றரசுகளான தெலுங்குச் சோழர், காடவராயர், சம்புவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் இடம்பெறுகின்றன.

தொண்டை மண்டலம் பல்லவர் ஆட்சிக்குப் பின் சோழ மன்னன் 'முதலாம் ஆதித்தன்' தொண்டை நாட்டுப் பகுதியைக் கைப்பற்றினான் என்பதை 'தொண்டை நாடு பாவின சோழன்' என்று இவனை தில்லைஸ்தானக் கல்வெட்டு கூறுகிறது. எனவே சோழர் அரசு தோன்றிய பின்னர் முதலாம் ஆதித்தன் காலத்தில் தான் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சிக்குப்பட்டிருந்தது எனலாம். இவனையடுத்து ஆட்சிசெய்த முதலாம் பராந்தகன் தொண்டை மண்டலத்தையடுத்துள்ள நெல்லூர் பகுதியினை ஆட்சி செய்த சிற்றரசர்கள் பாணர்கள், வைதும்பர்களின் பகுதிகளை கைப்பற்றினான். இவர்கள் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனிடம் முறையிட மூன்றாம் கிருஷ்ணன் சோழ அரசு மீது போர் தொடுத்தான். தக்கோலம்

என்ற இடத்தில் நடைபெற்ற போரில் முதலாம் பராந்தகனின் மகன் இராஜாதித்தன் அப்போரில் இறந்தான். அதன் பின்னர் 25-ஆண்டுகள் தொண்டை மண்டலம் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில் தான் முழுவதுமாக தொண்டை மண்டலம் சோழப் பேரரசின் கீழ் வந்தது. இத்தொண்டை மண்டலத்தை வெற்றி கொண்ட இவ்வெற்றியினை குறிக்கும் வகையில் பின்னர் இம்மண்டலத்திற்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் இடப்பட்டது.

முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1018-1054)

முதலாம் இராசேந்திரனின் மூத்த மகனான முதலாம் இராசாதிராசனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.-1050) அருளாளப் பெருமாள் கோயில் நரசிம்மசாமி சன்னதி உட்புற வலதுச் சுவரில் இடம் பெற்றுள்ளது. அருமொழிதேவ வளநாட்டு கொழவைமங்கலத்து ஊர்த்தலைவன் அய்யன் செட்டியார் மகள் இராஜமாணிக்கத்தார் எனும் ஜெயங்கொண்ட சோழ வீர நுளம்பமகாதேவியார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்கு காது ஆபரணம் ஒன்றும், விளக்கெரிக்க ஆடுகளும் தானமளித்துள்ளச் செய்தியைக் கூறுகிறது.

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120)

முதலாம் குலோத்துங்கனின் 3-ஆம் ஆட்சியாண்டு தொடங்கி 45-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 7 கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டும், 36, 43 மற்றும் 45-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் தலா ஒன்றும், ஆட்சியாண்டுக் குறிப்பிடாத கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன. இம்மன்னனின் 45-ஆம் ஆட்சியாண்டில் சோழ மண்டலத்து விருதராஜபயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்க முழையூர் உடையான் மும்முடிச் சோழன் எனும் அனுக்கப்பல்லவரையன் என்பவன் காலைச் சந்தி வழிபாட்டிற்கு தானமளித்துள்ளான். கோயில் மடைப்பள்ளி, மண்டபம், திருச்சுற்று மதில் ஆகியவற்றை முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் 'நரலோகவீரன்' ஏற்படுத்தியுள்ளான்.

விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135)

இம்மன்னனின் எட்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. இவனின் 8-ஆம் ஆட்சியாண்டுத் தொடங்கி 17-ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுகள் உள்ளன. விக்கிரம சோழனின் 8-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1126) திருவிந்தளூர் நாட்டு தென் கஞ்சாறு என்னும் ஊரைச் சார்ந்த கஞ்சரம் வசிஷ்டன் குமாரசுவாமி என்பவன் அருளாளப்பெருமாள் கோயில் வளாகத்தில் ஸ்ரீரங்கசாயி எனும் விக்கிரம சோழ விண்ணகர் பெருமாள் இறைவனுக்கு நீராட்டுதலுக்காக வேண்டி 197½ கழஞ்சு பொன் அளித்து பாத்திரம் செய்தளித்திட தானமளித்துள்ளான்.

பொய்கை ஆழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகிய இரு வைணவ பெரியார்கள் பிறந்தது கேட்டை நாளாகும். வருடத்தில் வரும் 13 கேட்டை நாளுக்கும் வழிபாடு

நடத்திட 750 கலம் நெல் தானமளித்து அந்நெல்லிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு இவ்வழிபாடு நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தானத்தை சோழ மண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்க முழையூர் என்ற ஊரைச் சேர்ந்த வேங்கடன் ஆதித்ததேவன் எனும் வங்கத்தரையன் என்பவன் அளித்துள்ளான். இம்மன்னன் தன்னுடைய பெயரில் எழுப்பியுள்ள விக்கிரமச் சோழ விண்ணகர் ஆழ்வார் சன்னதியில் தனது 11-ஆம் ஆட்சியாண்டில் விக்கிரம சோழ விண்ணகர் ஆழ்வார் திருவுருவினை எழுந்தருளிவந்துள்ளான். மேலும் இவ்விறைவன் வழிபாட்டிற்காக வேண்டி காலியூர் கோட்டம், காலியூர் நாட்டிலிருந்த வில்வலம் என்னும் ஊரின் பெயரை தனது பெயரால் அகளங்கநல்லூர் என்று பெயர் மாற்றம் செய்து தானமளித்துள்ளான்.

இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1163)

இரண்டாம் இராசராசனின் 3-ஆம் ஆட்சியாண்டு முதல் 27-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 7 கல்வெட்டுகள் மலைப்பகுதி சுற்றுச் சுவர்களில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் இம்மன்னனின் 22-ஆம் ஆட்சியாண்டில் கூத்தனூரைச் சேர்ந்த சேட்டலூர் பொம்மன் என்பவரின் மகள் பேரருளாளன் கொற்றி என்பவள் தன்னுடைய ஆபரணங்களை விற்று 100 குழிநலத்தினை வாங்கி, தன்னுடைய வாழ்நாள் மறைவிற்கு பின்னர் அந்நிலத்தினை அருளாளப் பெருமாள் கோயிலுக்கு வழங்கிட வழிவகைச் செய்துள்ளான்.

இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163-1178)

இம்மன்னனின் கல்வெட்டு ஒன்று மட்டுமே இரண்டாம் திருச்சுற்று வடபுறச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு இம்மன்னனின் 14-ஆம் (கி.பி. 1177) ஆட்சியாண்டைச் சார்ந்தது . இக்கல்வெட்டில் கங்கமண்டலத்து மகாமண்டலிகன் சோழ மாராசன் கட்டி நுளம்பன் புசபலவீரன் அகோமல்லரசன் திருநந்தவனம் அமைக்க நிலம் வாங்கித் தானமளித்துள்ளச் செய்தியைக் கூறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218)

மூன்றாம் குலோத்துங்கனின் 11-ஆம் ஆட்சியாண்டு முதல் 37-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 22 கல்வெட்டுகள் உள்ளன. இம்மன்னனின் அரசியல் அதிகாரிகள், இவனது அரசின் கீழிருந்த சிற்றரசர்கள் இக்கோயிலுக்கு தானமளித்துள்ளதைப் பெரும்பாலானக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கனின் 35-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1134) அருளாளப் பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் அமைந்துள்ள ஆனந்தாழ்வார் சன்னிதியை கங்கநாட்டை ஆட்சிசெய்த சிற்றரசன் சீயகங்கன் என்பவன் கட்டியச் செய்தியை தருகிறது. இவனை கங்க குலத்தினன் என்றும், குவளாலபுர பரமேஸ்வரன் என்றும் (குவளாலபுரம் என்பது தற்போதைய 'கோலார்' பகுதியாகும்) கல்வெட்டு கூறுகின்றது. தன் நாட்டிலிருந்த பவணந்தி முனிவரைக் கொண்டு 'நன்னூல்' என்ற இலக்கண நூல் இயற்றுவித்தவன் இவனே. இவனை அந்நூற்பாயிரம் 'அருங்கலை

விநோதன் அமராபரணன்' என்று பாராட்டுவது குறிப்பிடத்தக்கது. இவனது பெயரில் 'அமராபரணம்' சந்தி என்று ஏற்படுத்தியுள்ளதையும் இங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1256)

இம்மன்னனின் கல்வெட்டுகள் இக்கோயிலில் அதிகம் காணப்படுகின்றன. அதாவது 84 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இம்மன்னனின் காலத்தில் தொண்டைமண்டலப்பகுதி காடவராயர், தெலுங்குச் சோழர், சம்புவராயர், வாணகோவராயர் ஆகிய சிற்றரசுகள் சோழர் ஆட்சியின் கீழ்கட்டுப்பட்டு வரி செலுத்திவந்துள்ளனர். ஏனெனில் இவர்களின் கல்வெட்டுகள் சோழ மன்னன் இராசராசனது பெயரையும் ஆட்சியாண்டையும் குறிப்பிட்டுள்ளனர்.

கீழைக் கங்கர்

கீழைக் கங்க மன்னன் தனது 19-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1230) இவனின் தேவியான சோமலாதேவி மகாதேவி என்பவள் உடையகாமம் என்ற ஊரினை அருளாளப் பெருமாள் வழிபாட்டிற்கு கொடையாக அளித்துள்ளாள். கலிங்க மன்னன் அணியங்க பீமதேவராகுதன் விளக்கெரிக்க மாடுகள் தானமளித்துள்ளான்.

போசளர்கள்

போசள மன்னன் விஷ்ணுவர்த்தன வீர நரசிம்மனின் அமைச்சர் அம்மண தண்டநாயக்கர், படைத்தளபதி மல்ல தண்டநாயக்கர் மகன் தண்டின கோப ஜெகதொப்பகண்ட கொப்பய தண்டநாயக்கன், வீர சோமேஸ்வர தேவராசாவின் அமைச்சர் போலாழ்வி தண்டநாயக்கன், போசளமன்னனின் படைத்தளபதி தண்டினகோப மாதய்ய தண்டநாயக்கர், படைத்தளபதி தண்டின கோபனின் சகோதரர்களான மல்ல மாதவ்யதண்ட நாயக்கன், கேசவ நாயக்கன், கொப்பய தண்ட நாயக்கர் ஆகியோர் இக்கோயிலுக்குத் தானமளித்துள்ளனர். போசள மன்னன் இரண்டாம் சோமேஸ்வரனின் பட்டத்து அரசி தேவிகா என்பவள் சாளுக்கிய வம்சத்தைச் சார்ந்தவள் என்று இம்மன்னனின் கல்வெட்டு ஒன்று பகர்கிறது.

தெலுங்குச் சோழர்

மூன்றாம் இராசராசனின் 5-ஆம் ஆட்சியாண்டில் நெல்லூரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த தெலுங்குச் சோழ சிற்றரசன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் எனும் எறசித்தரசன் என்பவனின் அமைச்சர் வயிரப்பநாயக்கன் என்பவன் தனது தாயார் காமசானியார் உடல் நலம் பெற வேண்டி 200 குழிநிலத்தினை திருநந்தவனமாக செய்வதற்கு தானமளித்துள்ளான். கண்டகோபாலருக்கு இருந்த தேவியருள் ஒருவர் கேத்தமல தேவியார் என்பதை கல்வெட்டு எண்-51 தெரிவிக்கிறது.

மதுராந்தகப் பொத்தப்பிச் சோழ மனுமசித்தரசன் திருக்காளத்திதேவன் எனும் கண்ட கோபாலன் அளித்த தானங்கள் பற்றி கூறும் கல்வெட்டுகள் மட்டும் 30

எண்ணிக்கைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவனின் படைத்தளபதி காமிநாயக்கன், தியாகசமுத்திர பட்டயார், நுளப்பியாற்றுழான் நாராயண நம்பி தாமோதரன் ஆகியோரும் அருளாளப் பெருமாள் கோயிலுக்கு கொடையளித்துள்ளனர். அல்லுந்திக்க மகாராஜ கண்ட கோபாலனின் 2,3,5,6,7 ஆகிய ஆட்சியாண்டுகளைச் சார்ந்த எட்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் இடம்பெற்றுள்ளன.

'Kanchipuram through the ages" ஆசிரியர் சி.ஆர். சீனிவாசன் அவர்கள் விசைய கண்டகோபாலன், வீர கண்ட கோபாலன், ஆகிய இருவரும் தெலுங்கு பல்லவர் என்று குறிப்பிட்டுள்ளார். ஏனைய வரலாற்று ஆசிரியர்கள் தெலுங்குச் சோழர் என்றே குறிப்பிட்டுள்ளனர். விசைய கண்ட கோபாலனின் காலம் கி.பி. 1250-1291 ஆகும். இம்மன்னனின் கல்வெட்டுகள், 20 கல்வெட்டுகள் உள்ளன.

பிற்காலப் பல்லவர்

பிற்காலப் பல்லவர்களின் குறிப்பிடத்தக்கவன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஆவான். அவனின் கல்வெட்டுகள் 6 எண்ணிக்கைகள் இடம்பெற்றுள்ளன. நெல்லூர் நாட்டு மண்டகத் தளியைச் சேர்ந்த சந்திரசெட்டி விளக்கெரிக்க 44 மாடுகள் தானமளித்துள்ளார். மலைமண்டலத்து அரசியல் அதிகாரியான நாராயணன் சங்கரன் என்பவன் தானமளித்துள்ளான். அருளாளப்பெருமாள் கோயில் கோபுரத்தினை சீர் செய்ய வேண்டி சோமங்கலம் கிராமத்தின் 'அரிப்பாடிகாவல்' வரி தவிர அனைத்து வரிகளையும் கடகன் எனும் நீலகங்கரையன் வழங்கிட கோப்பெருஞ்சிங்கனின் 15-ஆம் ஆட்சியாண்டில் ஏற்பாடு செய்துள்ளான். நெல்லூர் அன்னல தேவனின் மைத்துணி செவ்வக்கன் என்பவள் 15 நெல்லூர் மாடை அளித்து விளக்கெரிக்க ஏற்பாடு செய்துள்ளாள்.

பிற்காலப் பாண்டியர்

சோழப்பேரரசுக்கு பின்னர் ஏற்பட்ட பிற்காலப் பாண்டியரில் வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தொண்டைமண்டலப்பகுதி பிற்காலச் சோழர் காலத்தில், இப்பகுதியில் இருந்த சிற்றரசுகளான பிற்காலப்பல்லவர், சம்புவராயர், காடவராயர், வாணகோவராயர், தெலுங்குச் சோழர் ஆகியோரின் கட்டுப்பாட்டிலே இருந்துள்ளது. பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுகளில் அச்சிற்றரசர்கள் அளித்துள்ள கொடைகள் பற்றிய கல்வெட்டுகளே இதற்குச்சான்றாகும்.

இந்நூல் குறுகிய காலத்தில் சிறப்புற வெளிவரக் காரணமாயிருந்த இத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள். கல்வெட்டுக் குறிப்புரைகளை நெறிபடுத்திய இத்துறை மேனாள் கல்வெட்டாய்வாளர் திரு. சீ. இராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி.

இரா. சிவானந்தம்
கி. சு. சம்பத்

மாவட்டம் : காஞ்சிபுரம்

ஆட்சி ஆண்டு : 32

வட்டம் : காஞ்சிபுரம்

வரலாற்று ஆண்டு : கி.பி. 1050

ஊர் : காஞ்சிபுரம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 519/1919

மொழி : தமிழ்

முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

ஊர்க் கல்வெட்டு எண் : 1

அரசன் : முதலாம் இராசாதிராசன்

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் நரசிம்மசுவாமி சன்னிதி உட்புற வலதுபுறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டுச் சேதமடைந்துள்ளது. அருமொழிதேவ வளநாட்டு, அளநாட்டு கொழவாய் மங்கலத்து ஊர்த்தலைவன் ஐய்யந் செட்டியார் மகள் செட்டி ராஜமாணிக்கத்தார் எனும் நுளம்பமாதேவியார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்கு விளக்கெரிக்க 96 ஆடுகள் தானமளித்துள்ளாள். மேலும் இறைவனுக்கு காதணி (திருவாளி) தானமளித்துள்ளாள். இவளது முழுப்பெயர் ஜெயங்கொண்ட சோழவீர நுளம்பமாதேவியாராந செட்டி ராஜமாணிக்கத்தார் என்பதாகும். இவள், நிலங்குடிதாங்கியாரான ஜயங்கொண்ட சோழ வீரநுளம்பரின் மனைவியாவாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திங்களேர் தருதன்றொங்கல் வெண்குடைக்கீழ் நிலமகள் நிலவ மலர்மகள் புணர்ங ...

2. லோச்சிக் கருங்கலி கடிஙு தன் சிறியதாதையும் திருத்தமையனையுங் குறிகொள் தன் இளங்கோக்களையும் நெறியு

3. .. தன்றிருப்புதல்வர் தம்மையும் துன்றெழில் வானவன் வில்லவன் மீனவன் கங்கன் இலங்கையற் கிறைவன்

4. ... ற பல்லவன் கன்ன குச்சியர் காவலனென பொன்னணி சுடர்மணி மகுடஞ் சூட்டி படர்புகழாங்கவர்க்கவர் நாடருளி பாங்கு

5\. . . . மூதவஞ . . . . தெரியல் விக்கிரமநாரணன் . . . . ன்டிபடுத்தருளி . . . ஊ

6\. . . . . தெந்நவர் மூவருள் மாநாபரணந் பொந்முடிப்பெருமநி பசுஞலைப்பொருகளத்தரிஞ வாரளவியகழல்

7\. . . . . கதக்களிறாலுதைப்பித்தருளி அஙமில் பெரும்புகழ் சுஙரபாண்டியந் கொற்ற வெண்குடையும் கற்றைவெ

8\. . . . . விழ தலைவிரித்தடிதளஙொட தொல்லைமல் முல்லையூர் துரத்தி ஒல்கலில் வேணாட்ட

9\. . . . . வில்லவந் குடர்மடிக் கொண்டு தந்நாடு விட்டொடி காடு புக்கொடிளிப்ப வஞ்சியம் புதுமலர்

10\. மலைதொங்கெஞ்சலில் வேலைகெழு காஙஞூர்ச்சாலை கலமறுப்பித்தா[ஹ]வமல்லநு மஞ்சக்கேவுதந்றாங்கரும் படையாலாங்கவந் சேனையுள் கண்டப்ப . .

11\. நும் கங்காதரநும் வண்டமர் களிறொமடிய திண்டிறல்விரிதர விக்கியும் விசயாதித்தநும் கருமுரட்சாங்கமை[ய*]நும் சமரருவத்துடை விரிசுடர்பொ

12\. . . யங்கரிபுரவியொடும் பிடித்து தநாடையிற் ஜயங்கொண்டு தஙார் கொள்ளிப்பாக்கையுள்ளரி மடுத்து ஒருதநித்தண்டாற் பொருகடல்லி[ல*]ங்கை

13\. யர்கோமாந் விக்கிரமவாஹுவிந் மகுடமும் . . நக்குடைஞ தெந்றமி . .

14\. . . . . முழுவதுமிழஞ ஏழ்கடல்லீழமும் புக்கிலங்கேசநாகிய விக்கிரமபாண்டியந் பருமணிமு[டி*]யும் காண்டருதஙதாகிய . . . .

15\. ல்லீழம் சீரி[தெந்]றெண்ணி உளங்கொள் நாடு தன்னுறவொடும் புகுஞ விளங்குமுடி கவிஞ விரசலாமேகந் போர்க்களத்தஞ்சி தந் கார் . . றிழஞ கவ்வைமிற்றோடி

16\. காதலியொடு ஞறாவ்வையை பிடித்து தாயை மூக்கரிய ஆங்க[வ*]மாந நீங்குவதற்காக மிட்டும் வஞ வாட்டொழிலிழிஞ வெங்களத்துலவஞ சிங்கள

17\. த்தரசந் பொந்நணிமுடியும் கன்னரன்வழி வஞரை கொளி[ழ*]த்தரைசந[ர*]கிய ஸ்ரீவல்லபமதநராஜந் மெல்லொளித்தடமுடி வடபுலத்திருகாலா

18\. வதும் பொருபடை நடாத்திக்கண்டர் திநகரநாரணந் கணவதி வண்ட

19\. . . . யல் மதுசூதந . . . வரைசரை முநைவமிற்த்துரத்தி வம்பமந்தருபொழில் கம்பிலிநகருள் சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் . . . கமில்தந் . .

20\. . . . . களிற்றுச் சக்கரவத்தி விக்கிரமநாரணநறந் படைஞரை ஏவி முந்பமர் ஆஹவமல்லர் அஞ்சி

21–28 . . . . . .

29\. பெரும்புகழ்[க்*] கோவிராஜகேசரிபந்மராந உடைய[ார்*] ஸ்ரீராஜாயிராஜ ஜெவர்க்கு யாண்டு [௩]௰௨ ஆவது திருவத்தியூர் ஆழ்வார்க்கு வளவநங்

30\. . . டியார் நிலங்குடிதாங்கியாராந ஜயங்கொண்டசோழவீர நுளம்பர்க்கு புக்க அருமொழிதேவ வளநாட்டு அளநாட்டு கொழவாய்மங்கலத்துக் கொழ

31\. வாய்மங்கலங்கிழார் ஐய்யந்செட்டியார் மகளார் செட்டிராஜமாணிக்கத்தாராந நுளம்ப மாதேவியார் தங்களாச்சி வேளாநாரால் மு . . . ச்ச . . வச

32\. தி . . விளக்கு ஒற்நிக்கு வைத்த ஆடு தொண்ணூறும் கார்த்திகைக் காத்திகைய்க்கு வைய்த்த ஆடு அஞ்சும் ஆக ஆடு தொண்ணூற்று அஞ்சும் இவை

33\. . . . . . . ற்றில் திருவத்தியூர் இருக்குமந்றாடி பெரியாந் புகழியாந பஞ்சவந் மாதேவிக்கோந் கொண்ட ஆடு நாற்பத்தேழ் அரைக்கு அட்டக்கடவ நெய்

34\. . . . த்திகைக் காத்திகைய்க்கு நெய் இருநாழி உரியும் ஊறில் காத்தநாந புவலோக மாணிக்ககோந் கொண்ட ஆடு நா[ற்பத்தேழரை . .] அட்டக்க

35\. . . . க்கும் காத்திகைக் காத்திகைய் நெய் இருநாழி உரியும் ஆக நித்த நெய் உழக்கும் காத்திகைய் கார்த்திகைய்க்கு நெய் அஞ்ஞா . . . . . முட்டாமே [செ]லு

36\. . . . வ்விருவோம் இப்படி முட்டாமேய் அட்டுவிப்பதாநோம் திருவத்தியூரா[ழ்*]வார் ஷெவர் கந்மியளோம் யாண்டு [௩]௰௨ டாவது ஜெயங்கொண்

37\. டசோழவீர நுளம்ப மாதேவியாராந செட்டி ராஜமாணிக்கத்தார் ஆழ்வார்க்குச் சாத்த இட்ட திருவாளி +. . . . . . ளி சொற்பட்

38\. ந . . . ல்ல அ . . க்காளும் இதில் முத்து ஒற்றி நிறை கழஞ்சே ஏழுமஞ்சாடியும் குன்றியும் அ

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : முதலாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 3

வரலாற்று ஆண்டு : கி.பி. 1073

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 403/1919

முன் பதிப்பு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : அருளாளப்பெருமாள் கோமிலுள்ள பாறையில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருவத்தியூர் ஆழ்வார் தினசரி வழிபாட்டுத் தேவைகளுக்காக வேண்டி தேவதானமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. யாண்டு ந ஆவது ாகூ னால் திருஅத்தியூராழ்வாற்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக சக்கரவத்திகள் சி குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ந
2. ஆவது திருவாய்மொழிந்தருளி தேவதானமாக இட்டுக் களப்பாளராயரும் மழவராயரும் சித்தராயரும் வயனாட்டரையரும் புரவுவரி ஸ்ரீகரணநாயகம் செம்மாம்பாக்கிழ–
3. ானும் இறையங்குடி கிழவனும் கடலூர் கிழவனும் இரையூருடையானு[ம்*] முகவெட்டி பனையூருடையானும் புஞ்சிற்றூருடையானு முகையூர் கிழவனும் எழுத்திட்
4. டுவந்த உள்வரிப் பொத்தகத்தில் கோத்து ஊர்முதலில் பாட்டெறிந்தபடிக்கு உள்வரி சிறுகச்சி[ப்]பேடு சத்திமங்கலம் உட்பட அளவின்படி நீங்கல் நீக்கி இருபூவி
5. ளை ௹ ருய ௸ வத ஒரு பூவிளை ௹ ாருயஉருச வ வத ஆக நீர் ௹ ஊாஉருகூசு னால் வரிசை கொண்ட ௹ ஊாருயஉ இச சூஜ னால் வே[லி] க க்கு ஊ ந . ா ஆக நகூ

6. [ஸ]தருᒼாஅயிஉாகூகூ புன்செய் ரு . . யிக இகூ ൭ ൬ னால் வேலி
க க்குᏯ ᵬஉா ஆக ᵬாயிகாகூகூ ஆக புன்செய் உட்பட ருᵬாசயிஉவ
கூசூஜு னால் வரிசைப்படி

7. ᵬஎதாகாகசம ᵬ ஆவது முதல் தேவதானமாக இட்டமைக்கு இவை
வரிப்பொத்தகநாயகம் சிறுமாங்காடு கிழானெழுத்து இவை புரவுவரி
ஸ்ரீகரணநாய

8. கம் வாணியனெ[ழு*]த்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி
ஐயண்டம்பாக்கிழா னெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி
அளகுழானெழுத்து இவை

9. புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி அழிசுபாக்கமுடையானெழுத்து[॥*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1073
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	522/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	உடையார் ஸ்ரீராஜேந்திர தேவர் (முதலாம் குலோத்துங்கன்)			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னிதி கோபுர இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : திரைமூர் நாட்டைச் சார்ந்த ஊர்த்தலைவர் இக்கோயில் திருநந்தவனத்தில் திருமாம்பழமுடையான் எனும் பெயரில் எடுப்பித்த திருமண்டபத்தில் இறைவன் எழுந்தருளும்போது வழிபாட்டிற்காக அறுபது காசுகள் திருவத்தியூர் பண்டாரத்தில் கொடுத்துள்ளார். சபையார் அறுபது காசுகள் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினைத் திருவத்தியூர் இறைவன் வழிபாட்டுக்காக விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ[॥*] திருமன்னிவிளங்குமிருகுவிடனையதன் தோளும் வாளும் துணையெனக்கேழலர்
2. வஞ்சனை கடந்து வயிராகத்துக் குஞ்சரக்குழாம்பல வாரி யெஞ்சலில் சக்கரக்கோட்டத்து தாராவரச[ன்*]னத்திக்கு
3. நிகழத் திறைகொண்டருளி அருக்கனுதையத்தாசையிலிருக்கும் கமலமனைய நிலமகள் தன்னை முந்நீர் குளித்தவந்
4. நாள் திருமால்லாதி எடுத்தன்ன யாதுஞ்சலியா வகையிநிடுத்துதன் குடைநிழலில் இன்புறவிருத்தி திகிரியும் புலியு
5. ந்திசைதோறும் நடாத்தி புகழுந் தருமமும் புவிதொறும் நிறுத்தி வீரமும் தியாகமும் மானமுங் கருணையும் உரிமைச் சுற்றமாகப் பிரியாத்த

6. ல நிகழ் சயமும் தாநும் வீற்றிருந்து குலமணிமகுடமுறைமிற் சூடிதந்கழல் தராதிபர் சூட செங்கோல் நாவலம்புவிதொறும் நடாத்

7. தி கோவிராஜகேசரிபந்மராந உடை[யார் ஶ்ரீரா]ஜேஞ்ர சோழ[தேவ]ர்க்கு யாண்டு மூன்றாவது ஜயங்கொண்டசோழமண்டலத்து

8. எயிற்கோட்டத்து எ[யில்] நாட்டு திருவத்தி . . . . சோழமண்டலத்து . . . . வளநாட்டுத் திரைமூர் நாட்டு ந

9. டார் கிழார் ராஜராஜ . . . . வேளார் செயிதத் திருநன்தவனம் திருமாம்பழம் உடையாநு[ழ்]க்

10. குங்குடிகள் மூவர்க்குக் கோற்றுக்குப்புடவை . . . . . . [ஆ]ழ்வார் திருநாட்களில் திருவிழாவெழுஊருளி இத்திருநஊவனத்தில் இவர் எடு

11. ப்பித்த திருமண்டபம் திருமாம்பழமுடையாநில் எழுஊருளி இருஊ சிறுசோற்றமுது செய்தருளுகைக்கும் வேண்டும் நிமஊங்களுக்கும்

12. பூமிகொள்ள இவர் திருவத்தியூராழ்[வார்] பண்ட[ரத்தி]ல் ஒடுக்கிவைத்த காசு அறுபது இக்காசு அறுபதும் காலியூர்க்கோட்டத்து காலி

13. யூர் நாட்டு ஸ்ரஹ தெயம் தெனந . . . ப்பாக்கத்து பெருங்குறி ஸபையோங் கொண்டு நாங்கள் விற்று [குடு*]கிற நில

14. மாவது எங்களூர் தெந்கழநியில் நாலாங்கண்ணாற்று நாங்கள் விற்றுகுடுக்கிற பூமிக்கு கீழ்பாற்கெல்லை மிருகத்தலத்து இளை

15. ய அருளாளக்கிரமவித்தந் . . . . எந்நுஞ்செறுவுக்கு கிழக்கடைய பாதிக்கும் தூதகரி கோளரிக்கிரமவித்தந் தாமந்செறுவு

16. க்குப் புண்டரவர்த்தநத்து . . . . ல கூத்தந் . . . . செறுவுக்கும் சடைப்பள்ளத்துக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை குடிமாத்து

17. ச்சிறுநாவற்கிரமவித்தந் . . . . எந்நுஞ்செறுவுக்கும் தூதகரி அநஊநாராயணக் கிரமவித்தந் காரிசுற்றி அறுமாவுக்கு வடக்கும் மே

18. ல்பாற்கெல்லை திருவரங்கப்பெருவதிக்கு கிழக்கும் வடபாற்கெல்லை தூதகரிச்சொட்டை ச . . . ரிச்செறுவுக்கும் தூதகரி மதுராஊககிர

19. மவித்தந் களரிச்செறுவுக்கும் தூதகரி மூத்த திருவாய்க்குலக்கிரமவித்தந் களரிச்செறுவுக்கு தெற்கும் இந்நாங்கெல்லையுள்ளு நடுவுபட்ட தடி

20. பலவிநால் ஶ்ரீபாதக்கோலால் குழிநாலாயிரமும் எங்களூர் வடகழநியில் விற்கிற நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை தூதகரி அநஊந[ா*]ராய

21. ணக்கிரமவித்தந் கோட்டைகாடந் ஏத்ததுக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை[அ]மபங்கால் கொல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை புண்டவர

22\. . . . . . . கிரமவித்தந் . . . . கிலும் தூதகரி திருவத்தியூர் நிந்றான் பளியோட்டை ஏத்தக்குண்டிலுக்கு கிழக்கும் வ

23\. . . . . கும் இந்நாந்கெல்லை யுற்பட்ட தடிபலவிநால் ஸ்ரீபாதக்கோலால் குழி இரண்

24\. டாயிரமும் ஆக குழி ஆறாயிரத் . . . . லியும் நாங்கள் விற்றுக்குடுத்த பரிசாவது வேலி ஒந்றுக்கு விலை

25\. . . மும் இறை ௨ாவிஂத்துக்கும் காசு யிருபதா . . . . . ஆவணக்களியே அறக்கொண்டு இந்நிலம் மூவேலியும் விற்றுக்குடுத்தோ

26\. ம்இந்நிலத்துக்கு பூப்பொந்நும் பஞ்சவாரமும் உள்ளிட்ட கோயிற்குடிமை வெட்டி முட்டை ஆள் சில்லிறை சோ

27\. று . . . . ச்சோற்றுக் கூற்று நெல்லு எப்பேர்ப்பட்டதும் நாங்களே ஊர்மேலே வரிஞ இறுப்பொ

28\. [ம்] இந்நிலத்துக்கு நிர்க்கிடிவாறு நீர்பாச்சிக்கொள்ளப்பெறுவதாகவும் இந்நிலம் நாங்களே கைக்கொ

29\. . . . . ற்கு அருமொழி தே . . . லால் நெல் நாற்பதிந் கலமாக ஆண்டுவரை நூற்றிரு

30\. . . . . அமுது செய்தருளவேண்டும் நிமஞங்களு

31\. . . . . ஆணைக்க . . . . அறுத்த நிலத்தால் வஞ போகம் நாங்க

32\. . . மாகவும் . . . . முந்சொல்லபட்ட ஸேநாபதிகள் வீரசோழ . . . .

33\. . . . . குங்குடிகளுக்கு திருநஞவநப்புறமாக இறைஇழிஞ்சி இறையிலி

34\. . . . . நமாக விற்று விலை ஆவணஞ் செய்து குடுத்தோ

35\. . . . ம்பாக்கத்து . . . யோம் இவர்கள் பணிக்க எழுதிநேந் சீயபுரமுடையாந் அத்தியூரந் ஆயகொழு . . [॥*]

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 36
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1106
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 631/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		

இடம் : அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்தின் முன் உள்ள கோபுர கிழக்குச் சுவர்

குறிப்புரை : முதலாம் குலோத்துங்களின் மெய்க்கீர்த்தி மட்டும் இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நி . . . . முடிசூடி மீனநவர் நிலைகெட வில்லவ[ர்] குலைதர எனைமந்னவர் இரியலுற்றிழிதரத் திக்கனைத்துஞ் சக்கரநடாத்தி வீரஸிம்ஹாஸநத்து அவனிமுழுது

2. முடையாளோடும் வீற்றிருந்தருளிய கொவிராஜகேஸரி . . . . லோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௩௰௬ ஆவது சோழமண்டலத்து குலோத்துங்க சோழ

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	43
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1113
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	49/1893
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கல்.தொ. IV. எண். 862
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேக மண்டபத்தின் அருகிலுள்ள கோபுர நுழைவுவாயில் இடதுபுறச்சுவர்.

குறிப்புரை : சோழமண்டலம், குலோத்துங்க சோழ வளநாட்டு, திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியைச் சேர்ந்த கருணாகரன் எனும் தொண்டைமானார் என்பவரின் மனைவி அழகிய மணவாளனி மண்டையாழ்வார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்குத் திருநந்தாவிளக்கு ஒன்று கொடையளித்துள்ளாள். குலோத்துங்கனது இறுதி காலத்தில் கி.பி. 1112-ல் நடைபெற்ற வடகலிங்கப் போரை நடத்திப் பெருவெற்றியுடன் திரும்பியவன் இவனது படைத் தலைவர்களுள் முதல்வனாகிய கருணாகரத் தொண்டைமான் என்பவனாவான். இவனைப் பற்றி கலங்கத்துப் பரணி நூல் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கருணாகரனானத் தொண்டைமான் என்பவன் இவனே. இவனது மனைவிப் பெயரே அழகியமணவாளனி மண்டையாழ்வார் என்பதாகும். இவனின் ஊர் திருநறையூர் நாட்டிலுள்ள வண்டாழஞ்சேரி ஆகும். இவ்வூர் தற்போது வண்டுவாஞ்சேரி என்று அழைக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[*] புகழ்மாது விளங்க செயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற்சிறஙு மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர
2. ஏனைமன்நவரி[ரி*]யலுற்றிழிதரத் திக்கனைத்துஙன் சக்கரநடாத்தி வீரஸிංஹாஸநத்து அவநிமுழுதுமுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரிவந்மராந திருபுவ
3. வநசக்ரவத்திகற் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்துமூந்று ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து திருவத்தி
4. யூராழ்வ[ா*]ர்க்கு சோழமண்டலத்துக் குலோத்துங்கசோழவளநாட்டு திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் வேளான் கருணாகரநாந தொண்டைமானார்
5. தேவியார் அழகியமணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தாவிளக்கு[॥*]

த.நா.அ.தொல்லியல்துறை | தொடர் எண் : 6

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	45
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1115
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	632/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்தின் முன் உள்ள கோபுர நுழைவு வாயில் வலதுபுறச் சுவர்

குறிப்புரை : சோழமண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு, மண்ணிநாட்டு வங்கமுழையூர் உடையான் அரையன் மும்முடிச்சோழன் எனும் அனுக்கப்பல்லவரையன் சிறுகாலைச் சந்தி வழிபாட்டிற்குத் தேவையானவற்றை 182 காசுகளின் வட்டியிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு செய்ய வழிவகைச் செய்துள்ளான். இவன் குலோத்துங்கனின் அரசியல் அதிகாரிகளில் ஒருவன்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறஙு மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர்க் குலைத்தர ஏனைமன்நவர் இரியலுற்றிழிதரத் திக்கனை
2. த்தும் தன்சக்கரநடாத்தி வீரஸிம்ஹாஸநத்து உலகுடையாளோடும் வீற்றிருஙருளிய கோவிராஜகேஸரிவந்மரான திரிபுவநசக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நா[ற்]
3. பத்து அஞ்சாவது ।।।– சோழமண்டலத்து விருதராயபயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்காமுழையூருடையாநரையன் மும்முடி சோழநான அனுக்கபல்லவரையன் நாற்பத்தஞ்சாவது நாள் நூற்[று]
4. த்தொண்ணூறு முதல் நித்தம் நிமஙமாக சிறுகாலைச்சஙி பால் திருப்போநகம் அமுது செய்தருளுகைக்கு நாளொன்றுக்கு திருப்போநகப் பழவரிசி நாநாழிய் நாலிரண்டஞ் சாக்கி நெல் குறுணி இருநாழியு[ம்]

5. பால் குறுணி இருநாழிக்கு பால் நாழிக்கு நெல் முந்நாழியாக நெல் முக்குறுணி அறு நாழியுமாக நெல் ஐய்ங்குறுணிக்குக் காசு[க்க] நெல் அருமொழி நங்கைமரக்காலால் நெல் பதி . .

6. மாக்காசு முக்காணி முஞ்ஜிரிகை கீழாறுமாமுஞ்ஜிரிகை பலவர்க்கத்துக்கறி நிறை இருபதின் பலத்துக்குக் காசு ஒன்றுக்கு கறிநிறை பதிநாயிரப்பலமாகக் காசு கீழரையே மூன்று மாவும் சர்க்கரை [நிறை]

7. ற ஐய்ம்பலத்திநால் காசு ஒன்றுக்குச் சர்க்கரை ஆயிரத்துநாநூற்றுப் பலமாகக் காசு கீழ்முக்காலும் வாழைப்பழம் பத்திநால் காசு ஒன்றுக்குப் ப[ழம்]

8. மூவாயிரத்தறு நூ[றா]க்காசு கீழ்முக்காலும் மிளகு இருசெவிடரையிநால் காசு ஒன்றுக்கு மிளகு இருபத்தெண்ணாழியாக காசு கீழ்முக்காலும் சீரகமரைச் செவிடிநால் காசு ஒன்றுக்கு சீரக[ம்]

9. பதினாழியாக காசு கீழறுமாவரையும் நெய் ஆழாக்கிநால் காசு ஒன்றுக்கு நெய் நாற்பதிநாழிக்குக் காசு அரைக்காணியும் உப்பு ஆழாக்கினால் காசு ஒன்றுக்கு உப்பு ஏழுகலநே தூணிப்பத[க்]

10. காசுக் கீழ்மாகாணியும் விறகுகட்டுக்காலினால் காசு ஒன்றுக்கு விறகுகட்டு நாற்பத்தைஞ்சாகக் காசரைக்காணிக் கீழ்நாலும் பாக்கு இருபதிநால் காசு ஒன்றுக்கு பாக்கு பதிநாயிரமாகக்கா

11. ணியே மூன்றுமாவும் வெற்றிலைப்பற்று அரையிநால் காசு ஒன்றுக்கு நாநூற்றிருபதாகக் காசு கீழ்க்காலே அரைக்காலும் கற்பூரம் ஒருமாவிநால் காசு ஒன்றுக்கு கற்பூரம் இருகழஞ்[சரை]

12. யாக காசுமுஞ்ஜிரிகை கீழ்க்காலும் ஆக நாள் ஒன்றுக்கு வேண்டுங்காசு . . . . நூற்றிறுபதுக்கு வேண்டுங்காசு இருபத்தா . . . .

13. அன்றாடு அறாகப்படித்திரமம் நூற்றெண்பத்திரண்டிநால் காசின் வாய்த்தன்மங்கலலிசை நாள் முப்பதுக்கு திரமங்கலாக நாள் முன்நூற்றறுபதுக்கு காசு ஒன்றுக்குப் பலிசைத் திரமம்

14. மூன்றாகப் பொலிவதாகவும் பொலிஞ பலிசைக்கு தேவபண்ட[ா*]ரத்தே வேண்டுவரை விட்டு செல்வதாக ஒடுக்கினகாசு அறுபத்தொன்று ॥–

த.நா.அரசு தொல்லியல் துறை

தொடர் எண் : 7

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	473/1919
மொழி	:	சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தம்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில் பாறை வடக்குச்சுவர்			

குறிப்புரை : மண்டபம், திருச்சுற்று மதில், தங்க ஆபரணங்கள், பத்து நந்தா விளக்கு மற்றும் திருநந்தவனம் அமைக்க நிலம் ஆகியவை கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. தொண்டைமண்டலத்து மணவிற்கோட்டத்து 'மணவில்' என்னும் ஊரைச் சேர்ந்தவன் 'நரலோக வீரன்' இவனுக்கு 'அருளாகரன்', 'அரும்பாக்கிழான்', 'பொன்னம்பலக் கூத்தன்' என்ற பெயர்களும் உண்டு. முதலாம் குலோத்துங்கன் இவனுக்கு 'காலிங்கராயன்' என்னும் பட்டமளித்தான். இவன் தில்லை மற்றும் திருவதிகைக் கோயில்களில் பலத் திருப்பணிகளைச் செய்வித்துள்ளான். தேவாரப்பதிகத்தினைச் செப்பேடுகளில் எழுதுவித்து தில்லையில் வைத்தது இவனது சிறப்புப் பணியாகும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*]ஸ்ரீமாதவிஷ்ணுரமலவிழஶ்ரீமொஜியெந வஶவீநஜம ஷ்ரீமஶ்ஷயா
ஶஹகொலகஸு வகெ ஹரெவஹஶ்ரஸாஷக . . ஶஜநாய வஶ்ஷாய
ஹஷிவஶ்ஶயாஷி ஶஹாநஸம ஸஃ

2. யீஶஷ்யிஜாஹிஶயஶிகூக ஜெவஶாஷு வ்ராகாஶகூ[வ]ரிகஷு ஸஶ . . வஷு
தஸுவஸாஶஸஶஜெஹெந ஜெ ஸாஹொஃ வ . . . . ஶணவஶதாநி
ஹிநக்ரீண [ர*]ழ ॥உ

3. ஷாநல ஶிஜாஹிவவுகழ ஶஶாரெஷூஶம ஸவகெ நஶஜொகவிஶ
கிஷாகரொக கஷுஜெயெஹஶமழ ஞா[வா]வஹிஶாழவஶ ஸீஶவவுழ ॥உ

4. ஸஜ்வாஜு தாஉ வரிஷம்ஞ உநொஹரந்தஃ யாஉாநஃகாரயக தத . . ரிம் பஃயாநம் கூத்வாஸு ஹொஉ கூஞஸம் வியிநொவரிஷாத்த . . ஹிவது வியிநா கூஃரஃக்ஸஉந்தஃ ||உ

5. ஊத: ஷ்யாஹிந: கூஜிகூ . . . . கூஉஹிரயஜ வ யாந வுகூார . . உஃவஞஸாரி குதஹரெ[கூ]நூாஉாஶெூஷி யவஊ ரஃவிரிதுஹஜந . . உநுஃ உஃஹ்யாஸ்யிநூஃஙூநெஉகூுாஹந ச

6. ஸா ஹஉி ஹுஉி தநஃ ஹாஜா ஈவதாஜெது தஸ்ரிநூசயிதஃரநஃகூஜவா . . ஜுஉாநுஸு வஃமஸ: வுயிித ஸ உஶஉிவீம் ஶஸ்வெஉவஜ்ஞூந்தி . . ஹஃவநஹயதஜ ஸாவநு நி[ஹ]உ ஈவ: ||உ

7. தஞாஹுஜ ஸஜஉாஸநாஜவஃஜ உயக்ஙாஜவஃஜெ ச ஶீயஶ்ரீநாய . . ஹி கெவஞம் ஸஃரஹயஞ்ுமாநி நெதஸ்ரஜ நாநாவ . . ஸஃஹ்நிரஸ்தஃ ஹஶவாநிஞுஷ தஸுாகூ–

8. ரொகூ வெளஷ்ஜ வஃஷவிஶெஷ கொடிநிஸிஜ உாநாவதாரெ . . வநஜ [||*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	635/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்து எதிரிலுள்ள கோபுரத்தின் இடதுபுறச் சுவர்

குறிப்புரை : திருவத்தியூர் அருளாளப் பெருமாள் கோயில் குளத்தின் (திருப்பொய்கை) வடகரையில் அமைந்திருந்த அரிகேசுவன் மடத்தில் பிராமணர்களுக்கு உணவளிக்கும் பெரிய கோயில் மாமுனிகளிடம் ஜயங்கொண்ட சோழ மண்டலம், ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வைய்தவூர் ஊரார் பதினைந்து காசுகள் பெற்றுக் கொண்டு இறை நீக்கி நிலமொன்றினை விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. . . . . மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனைமன்நவர் இரியலு . . . . திக்கனைத்தும் தன்சக்கரநடாத்தி வீரஸிංஹாஸநத்து உலகுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரி வந்மரான [சக்கரவத்தி*]

2. . . . . வியாழக்கிழமையும் பெற்ற உத்திரத்தி நாள் பகற் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஊற்றுக்காட்டு நாட்டு வைய்தவூர் ஊரோம் நிலவிலையாவணக் கையெழுத்து சோழமண்டலத்து ராஜேந்த்ர சோழவ

3. ள நாட்டு . . . . கோட்டத்து எயில் [நாட்டு] திருவத்தியூர் நின்றருளின அருளாளப்பெருமாள் திருப்பொய்கையில் வடகரையில் அரிகேசுவன் மடத்து ப்ராஹ்மரை ஊட்டுகிற பெரியகோயில் மஹாமுநிகளுக்கு நாங்கள் விற்றுக்குடுத்த நிலமாவது கிழ . .

4\. . . . . யான் பள்[ளிச்செறு]வுக்கும் . . . . . ன்பாற்கெல்லை . . . . நிலத்துக்கு வடக்கும் இந்நிலத்து தெற்குநோக்கி வளர்ஞ நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை பள்ளித் தன்செறுவுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை யாங்களுடைய கொட்டுகால் நீர்பாயும் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்

5\. . . . . யாதும்பன் கொல்லைக்கு . . . . க்குக் கிழக்கும் . . . பர்[கெல்லகல்லை]கிழாந் அரையன் நம்புகாளி வாமெஸ்ரப் பெருஞ்செறுவுக்கும் யாங்களுடைய சங்கயனகழுவலுக்கும் படைச்சன் கழுவலுக்கும் வண்ணக்கன் நாரணத்தின்

6\. . . . . செறுவுக்கும் . . . . ருநான் [கெ*]ல்லை யுள்ளும் நடுவுபட்ட நிலத்தில் மு . . செய்காலாய்வருகிற நீர்நிலமும் பாழும் உட்பட்ட நிலம் ஆயிரத்தெண்பதும் நாலெ வரம்புக . . . ரையாக நிலத்தும் திருத்திப்பயிர் செய்ய

7\. . . . . த்து தொண்ணுறும் எட்டு மேட்டுப் பற்றில் . . . . றும் சஹ்ராதித்த நுள்ளிட்ட பயிர் செய்லாம் நிலங்குழி எழுநூற்றறுபத்தொன்பதரையும் சின் நிலத்துக்கு நீர்நிலையாகக் கல்லிநகுளமுங்காரயும் நீர்க்கோவையும் அகப்படிக்குழி அறுநூற்றுநாலும் ஆகக்குழி மூவ்வாயிரத்து

8\. . . . . இறையிலியாக விற்றுக்குடுத்துக்கொழ்வதாக எம்மிலிசைவு விலைப்பொருள் அந்றாடு நற்காசு பதிநைஞ்சும் இக்காசு பதிநைஞ்சும் ஆவணக்களரியே கைய்ச்செலவறக் கொண்டு அரிகேசுவன் மடத்துண்ணும் ஸ்ரூஹூவிதரை ஊட்டுகிற பெரியகோயில் மாமுநிக்கு விற்றுவிலை

9\. . . . . கொள்ளக்கடவோமாகவும் பெரிவேரி நீர்பாயக் கடவதாகவும் ஆறுமஞ்சியும் சில்லிறை சோறுமாட்டு எப்பேர்பட்டதுஞ் சொல்லப்பெறாதோமாகவும் முக்காலாவது திருவத்தியூர் கேசுவந்மடமுட்டும் பெரியகோயில் மாமுனிகளுக்கு . . .

10\. . . . . தேவநும் ஆதித்தன் திருவரங்[க]தேவநும் வணக்கன் ஏகாம்பரந் சரணநும் வண்ணக்கன் வேங்கடவந் சுப்பிரமண்ணியநும் தேசவெள்ளாளன் சஜயன் தேவநும் சீயமுழான் கம்பந்காமதேவநும் முவேஜ குழைஞ்சான் அழகிய மண

11. . . . . ற்றம்*பல முவேஞ பெஞவேளாநும் அரையன் காளி ஒப்பாதனமைக்கு ஒளிபெரியாந் காரிதுணையும் குளத்துழாந் படிக்குன்றின் ஒப்பாதநமைக்கு வண்ணக்கநாத்தித்தன் திருவரங்[க*]தேவநும் மங்கலங்கிழாந் ஸஜெயாநமைக்கு . . .

12. . . . . னமைக்கு வண்ணக்கன் வேங்கடவன்சுப்பிரமண்ணியநும் கூத்தருடையான் ஒற்றி ஸஜெயாநமைக்கு வண்ணக்கன் படம்பாக்கநாயகன் திருச்சிற்றம்பல மூவேஞ வேளாநும் ஒளிபெரியநந்தனயன் ஸஜெயாநமைக்கு ∴ழியவாணியன் இசக்கன் ஒற்றறியும் பிரம்பலக்

13. . . . . ப்பாதனமைக்கு வண்ணக்கநாதித்தன் திருவரங்க தேவநெழுத்து இவர்கள் பணிக்க கல்லில் எழுத்து வெட்டிநேன் திருவத்தியூர் . . ச்சன் அத்தியூரான் வடுகநாந ராஜநா . . . . உ

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1126
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	516/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	: விக்கிரம சோழன்			

இடம் : நரசிம்மசுவாமி சன்னதி நுழைவு வாயில் இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : திருவிந்தளூர் நாட்டு தென்கஞ்சாற்று கஞ்சாறன் வாசிஷ்டன் குமாரசுவாமி என்பவன் ஸ்ரீரங்கசாயியான விக்கிரமசோழ விண்ணகர பெருமாள் நீராட்டுவதற்கு உபயோகப்படுத்தும் பாத்திரம் (சகஸ்ரதாரை) நூற்றுத் தொண்ணூற்று ஏழரை (197½) கழஞ்சு பொன் அளித்துள்ளான். ஒன்பதரையே அரைக்கால் (9 5/8) மாற்றுக் கொண்ட இப்பொன்னினை கோயில் கல்லால் மாற்றுத் தன்மையை (தரத்தினை) சோதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. . . . . வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தந்நிருபதமலர மன்னவர் சூட மன்னிய உரிமையால் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறு வளர்ப வெங்கலி நிக்கி மெய்யறஹைப்ப கலிங்கமிரிய கடமலை நடாத்தி வலங்கொளாழிவறையாழி தி . . . .
2. நிழற்ற விஜையஷிஷேகம் பண்ணி வீரஸிஂஹாஸநத்து முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளின . . . .
3. புவநச்சக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு எட்டாவது
4. . . . . ள நாட்டுத் திருவிஙளூர்நாட்டு தெ[ன்]கஞ்சாற்று க[ஞ்]சாறன் வாஸிஷ்ந் குமாரஸ்வாமி ஸ்ரீரங்கஸாயியாந விக்கிரமசோழ
5. விண்ணகர பெருமாளுக்கு இட்ட ஸஹஸ்ரதாரை ஒன்பதரையே அரைக்கால் மாறி கோயில் கல்லால்ப் பொன்நூற்றுத் தொண்ணுற்று ஏழு கழஞ்சரை ॥உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1127
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	33/1893
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கல்.தொ. III. கல் எண். 80
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	விக்கிரமசோழன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில் பாறை மேற்குச் சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில் நாட்டு திருவத்தியூர் ஆழ்வார் மீது பாடல்கள் பாடிய பூதத்தாழ்வாரும், பொய்கையாழ்வாரும் பிறந்த நாளான திருக்கேட்டை நாளில் மாதந்தோறும் வரும் கேட்டை நாளில் அருளாளப்பெருமாளுக்கு வழிபாடு நடத்திட தானமளிக்கப்பட்டுள்ளது. சோழமண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு வங்கமுழையூர் வெண்காடன் ஆதித்ததேவன் எனும் வங்கத்தரையன் என்பவன் இக்கோயில் பண்டாரத்தில் 780 கல நெல்லினை ஒப்படைத்து, இந்நெல்லில் இருந்து வட்டியாக ஆண்டொன்றுக்கு 390 கல நெல்லின் வாயிலாக அருளாளப்பெருமாளுக்கு வழிபாடு செய்திட வழிவகை செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] பூமாது புணர[ப்]புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன்றிருபதமலர் மன்னவர் சூட மன்றிய உரிமையால் மணிமுடி சூடிச்செங்கோல் சென்று திசைதொறு[ம்*] வளர்ப்ப வெங்கலி [நீ]ங்கி மெய்யற[ந்தை]ழப்பக் கலிங்மிரியக்கடமலை நடாத்தி வலங்கொளாழிவரையாழி திரிய இரிசுடர[ள]வுமொருகுடை நிழற்ற விஜையாபிஷேகம் ப[ண்]ணி [வீ]ரஸிம்ஹாஸநத்து முக்கோக்கிழாநடிகளோடும் [வீ]ற்–
2. றிருந்தருளிய கோப்பரகேசரிபந்மரான திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழ[ம]ண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திரு[வ]த்தியூராழ்வாரைப் பாடியருளிந ஸ்ரீபூதத்தாழ்வாரும் ஸ்ரீபொய்கையாழ்வாரும் [பி]றந்த

திருக்கேட்டை நாள் அருளாளப்பெருமாள் புறப்பட்ட[ரு]ளி வைகாசி திருமஞ்ச[ந]மு[ம்] பெருந்திருவமுதுஞ் செய்தரு[ள]த் திரு[ம]ஞ்சநத்துக்குத் திருமுளைச்சார்[த்]த திருமு–

3. ளைப்பாலிகை முப்பத்தாறுக்குப்பாலிகை ஒன்றுக்கடிக்கீழட்ட நெல்லு உரியாக நெல்லுப்பதக்கிருநாழியும் திருமு[ளை]ப்பீதங்கொள்ள அரிசி னாநாழியும் புண்யாஹவசந[த்]துக்கு [அ]ரிசி அறுநா[ழி] உ[ழ]க்கும் [பலிதூ]வு[தற]க்கு அரிசி இரு நாழி உரியும் திருமு[ளை]க்குத் தி[ரு]நந்தாவிளக்குக்கு நாடெ[ள]ா[ன்]றுக்கு எண்ணை உழக்காக நாளஞ்சுக்[கு] எண்[ணை] நாழி உழ[க்]குங் கரதஹாரொஹணத்துக்கு நெய் [மூ]வுழக்காழாக்கும் திருமஞ்–

4. சநத்துக்குக்[க]லசம் எண்பத்தொன்றுக்கு அடிக்[கீ]ழ் நெல்லு [ஐ]ங்குறுணி உரியும் கும்[ப]நாலுக்கு நெல்லு நாநாழியும் திருச்சுண்ணக்கலசமொ[ன்]றுக்கடிக்கீழரி[சி] இருநா[ழி]யுங் கலசஞ்சூழக்காணவிலை[யின் பு]டை[வ] ப[தி]ந்மூன்றுங்கலசஞ்சுற்ற நூல[ை]ாப்பலமும் திருமஞ்சநத்துக்கு நெய் முன்னாழியும் தேநாழியும் பால் முன்–

5. னாழியு[ம்] தயிர் [முன்]னா[ழி]யும் ஸுகந்தங்கள் வேண்டுவ[ந]வும் பஞ்சலோக[மு]ம் பஞ்சரத்நமும் திருச்சுண்ணத்துக்கு நாட[ன்]மஞ்சள் நாற்பதிந் பல[மு]ம் திருவிளக்கெண்ணை உரியும் ஹொமத்துக்கு நெ[ய்]யுரியும் சாதி அரு[ள]ச்ச[ந]நமுக்க[சும்] கற்பூரமாறு [ம]ாவும் அகி[லை]ரக்க[ழு]ஞ்சுங் கஸ்தூரி ம[ஞ்]சாடியுமிரண்டு மாவு[ம்] புழுகு[நெ]ய்யிரண்டு மஞ்சாடியுநாலு மா[வும]ாத்திரைக்கரிசி நாநாழியு[ம்] டெ[ப]–

6. ருன்திருவமுதுக்கு அ[ரி]சி முக்கலனே குறுணியும் பருப்புப்பமக்கிருநாழி உரியும் பலவற்கத்துக்கறி நிறை எண்ணூற்றிருபத்தைம்பலமு[ம்] கறியமுதுக்கு உப்பு நாநாழியுமிளகு உரியும் கடுகு ஆழாக்கே இருசெவிடரையும் சீரகமாழக்கு[ஞ்ச]ர்க[ை]ர இருபதின் பலமும் நெய்யுரியும் அமுதில் ப[ை]டக்க சற்கரை [மு]ப்பத்திருபலவரையும் நெய் பதினொருநாழி ஆழாக்கும் வா–

7. [ை]ழ[ப்]பழமைம்பத்தஞ்சும் தயிர் தூணியும் கண்டசற்க[ை]ர முக்கசும் திருக்கண்ணாமடைக்கரிசி இருநாழியுநெய்யாழக்கும் சற்கரை இருபதின் பல[மு]ம் வாழைப்பழம் பத்தும் அப்பஅமுதுக்கரிசி பதக்கும் நெ[ய்]யிருநாழி உரியும் சற்கரை எண்பதிந்பலமு மி[ளக]ாழ[க்]கு[ம்

சீர]க[மி]ரு[செ]விடரையும் விறகு கட்டு மூ[ன்]றும் குசக்கலஉருவுக்கு நெல்லுக்கலமும் தண்ணீர் முதுக்கேலமொருசெவிடரையும் அ

8. டைக்கா[ய்]அமுதுக்கு பாக்கு நாநூற்[றெ]றம்[ப]து வெற்றிலைப்பற்றொந்பதும் திரு[வி]ளக்கெண்ணை நாழி உரியும் திருவி[ள]க்குடையார்கள் குழாய் பந்நிரண்டுக்கெண்[ணை மு]ந்நாழியும் பாவைவிளக்குக்கெண்ணை இருநாழியும் ஆக இவைமிற்றுக்கு நிமஷமாகச்செல்வதாக இட்ட சமவிலைப்படியாலிக்கோயில் சிலவளக்குமருமொழிநங்கை[ம]ர[க்]காலால் திருக்கேட்டை நாளொந்று

9. க்கு நெல்லு மு[ப்]பதிந் கலமாக ஒராட்டை நாளைக்கு வேண்டுவதாந நெல்லு முன்னூற்றுத்தொண்ணூற்றுக்கலத்துக்கும் சோழமண்டலத்து விராஜராஜஜயங்கரவளநாட்டு மண்ணிநாட்டு வங்கமுழையூர் முழை[ழ]யூருடையாந் வெண்காடந் ஆதித்ததேவநாந வங்கத்தரையந் இத்தேவர் பண்டாரத்து ச்சிலவளக்கு[ம]ரு[மொ]ா[ழி]நங்கைமரக்காலாலளஷ நெல்லு

10. எழுநூற்[றெ]ன்பதிந் கலமிந்நெல்லெழுநூற்றெண்பதிந் கல[த்]துக்கு மாஸந்தோறும் நெல்லு முப்பத்திருகலநே தூணிப்பதக்காக யாண்டு வரை கூ அமெரப்பொலிசையால் பலிசை பொலிவதாந நெல்லு முன்னூற்றுத்தொண்ணூற்றுக்கலமிந் நெல்லு மு]ந்நூற்றுத்தொ[ண்]ணூற்றுக்[க]லத்துக்கும் அருளாளப்பெருமா[ள்] மாஸஞோறும் திருக்கேட்டை நாள் புறப்பட்டரு[ளி]

11. திருமஞ்சநமும் பெருந்திருவமுதும் செய்தருள வேண்டுவநவைமிற்றுக்கு இந்நிமஷப்படிய ப[ண்]டாரத்திலே விட்டு சூஞாதிதவஷ நிமஷமாகச் செய்யக் கடவதாகச் சிலாலேகை செய்வித்துக் குடுத்தொம் இக்கோயிலில் ஸ்ரீகோயில் வாரியம் [பு]ண்ட[வ]த்தநத்து ராஜராஜகூ[ம]வித்தநும் தூதஹரி நின்றநாராயணக்கிரம வித்தநும் ஶ்ரஹஸ்ஷஷஷ

12. ப[ர]ண்டவதூதக்கிரமவிதநும் புண்டவத்தநத்து இளையகோக்கிரமவித்தநும் தூதஹரி [செ]வண்ணைக்கூத்தக்கிரமவித்தநும் தூதஹரி இளையருளா[ள]க்கிரமவித்தநும் கோமிற்கணக்கு உத்திரமேலூருடையாநாந எட்டி திருக்கா[ள]த்தி உடையானும் இவ்வனைவோம் [॥*] இப்படிக்கு இ[வை]வ உத்[தி]ரமே[லூ]ருடையான் எட்டி திருக்காளத்தியுடையான் எழுத்து ॥[உ]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 11**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1127
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	436/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	விக்கிரமசோழன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டத்து வல்ல நாட்டு சிற்றாமூரைச் சேர்ந்த திருமார்விடங்கொண்டாரான அலங்கார வல்லி என்பவர் அருளாளப்பெருமாள் கோயிலில் திருநுந்தா விளக்கெரிக்க 96 ஆடுகள் கொடையளித்துள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[॥*] பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தந்திருபதுமலர் மந்நவர் சூட மந்நிய உரிமையா-
2. ல் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறஞ்தழைப்பக் கலிங்மிரியக்கடமலை
3. நடாத்தி வலங்கொளாழிவரையாழி திரிய இரிசுடரளவும் ஒருகுடை நிழற்ற விஜை அபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து முக்கோ
4. க்கிழாநடிகளோடும் வீற்றிருஞ்தருளிய கோப்பரகேசரிவந்மராந த்ரிபுவந[ச்ச]க்ரவத்தி ஸ்ரீவிக்கிரமசோழதேவ[ர்]க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட
5. சோழமண்டலத்து எயிற்கொட்டத்து எயில்நாட்டுத் திருஅத்தியூர் நின்றருளிந அருளாளப்பெருமாளுக்கு வெண்குந்றக் கோட்டத்து வல்லநாட்டுச் சி[ற்]
6. றாமூர் தி . . த்திருமார்விடங்கொண்டாராந அலங்காரவல்லி வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு வைத்த ஆடு தொண்ணூறும் இவ்வாடு தொண்ணூ

7. ற்றில் திருஅத்தியூரடையன் வெம்பளப்ப(ப)நாந திருவாய்ப்பாடிக்கோன் விளக்கு
காலும் வெண்ணை உமிய்நாதந்[த்] திருவரங்கக்கோன் விளக்குக்காலு

8. ம் செல்வனப்பநாந ரா ஜநாராயணக்கோன் விளக்குக்காலும் சாத்தந்செல்வநாந
வெண்ணைக்கூத்தக்கோன் விளக்குக்காலும் ஆக விளக்கொன்றும் திருக்கா

9. ர்திகைக்கு கொண்ட ஆடு ஆறுக்கு நெய்அறுநாழியும் சந்திராதித்தவற்
நித்தம் உழக்குநெய் திருநாராயணத்தால் அளப்பார்களாகவும் இப்படிஇவ

10. ர்கள் முன்பு நில்லாது ஒளித்துப்போகிலும் இத்தன்மமுட்டாமே நெய்யளக்க
கடவோமாநோம் குழைந்தான் பள்ளிகொண்டான் செந்தாமரை–

11. க்கண்ணநும் இவ்விருவோம் இப்படிக்கிவை கோமிற்கணக்கு உத்திர
மேலூருடையானாந எட்டி திருக்காளத்தியுடையாநெழுத்து ||உ

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 12**

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1128
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	518/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
அரசன்	: விக்கிரமசோழன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னதி உட்புற வலதுபுறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமை பெறாமல் உள்ளது. விக்கிரம சோழனின் 10–ஆவது ஆட்சியாண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ[॥*] ஜெயங்கொண்ட சோழமண்டலத்து [எயிற்கோட்ட]
2. த்து [எயில்]நாட்டு திரு அத்தியூராழ்வாற்கு . . . . . உள்ளிட்ட . . . . .
3. . . . இறுப்பதாக சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ய ஆவ

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 13**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1128
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	520/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
அரசன்	:	விக்கிரம சோழன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னதி உட்புற இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : ஆமூர்க் கோட்டத்து குமிழி நாட்டு தையூரான இராசகேசரிநல்லூரில் நடுவிற்பாடியில் உள்ள உப்பளம் ஒன்றும், நிலம் ஒன்றும் தானமளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[॥*] பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப தன்திரு பத
2. மலர் மன்னவர் சூட மன்னிய உரிமையால் மணிமுடி சூடி செங்கொல் [சென்று திசை]தொறும்
3. வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்ப கலிங்கம் மி[ரியகடமலை நடாத்தி வ]லங்கொ
4. ளாழி வரையாழி திரிய இருசுடரளவு மொருகுடை நிழற்ற விஜைசுஹிஷேகம் பண்ணி வீரஸிங்ஹாஸன
5. த்து முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிபந்ஐரான திரிஹு-வநசக்கரவத்திகள் ஸ்ரீவி

6. க்கிரம சோழ தேவற்கு யாண்டு ம ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்ட

7. த்து எயில் நாட்டு திருஅத்தியூராழ்வாற்கு உப்பமுதுள்ளி[ட்ட வெஞ்சன]ங்களுக்கு இறுப்பதாக தி

8. ருவாய்மொழிந்தருளி தேவதானமாக இட செயகுன்றக்கிழ[வனும் புர]வுவரி திணைக்களநாயக

9. ம் வெண்ணைநல்லூருடையானும் பெருமூர் கிழவனும் இலுப்பையூர் கிழவனும் வடு[வூ]ருடையானு

10. ம் முகவெட்டி தெங்கூருடையானு மாப்புதங்கிழவனு மணலூர் கிழவனும் எழுத்திட்ட

11. உள்வரிப்படி பொத்தகத்தில் சேர்த்து [ஊர்]முதலில் மாட்[டெறி]ந்தபடிக்கு உள்வரி ஆமூற்

12. கோட்டத்து குமிழி நாட்டு தையூரான இராஜகேசரிநல்லூரில் நடுவிற்பாடியில் வட

13. க்கடை[ய] பன்னீரடிக்கோலால் குழி நானூற்றினால் அளம் ஒன்றும் இந்த அளத்துக்கு திரு

14. [இ]டவந்தையாழ்வார் மடபுறவாய்க்காலுக்கு தெற்கு பன்னீரடிக்கோல[ால் வி]ளைநிலம்

15. ஒன்றேகால்வேலியும் யாண்டு ம ஆவது முதல் தேவதானமான இட்டமைக்கு இை

16. வ வரிப்பொத்தகநாயகம் சிலமாங்காடுகிழானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து மு

17. கவெட்டி அரிசிபாக்கமுடையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி

18. ஐயண்டம்பாக்கிழானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி அளகுழானெ

19. ழுத்து [॥*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1129
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	590/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14
அரசன்	:	விக்கிரமசோழன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் இரண்டாம் திருச்சுற்றிலுள்ள கருமாணிக்க வரதர் சன்னதி உட்புறம்

2. கிழமையும் அத்தமும் பெற்ற நாள் செயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோ[ட்*]டத்து நகரம் காஞ்(ச்)சிபுரத்து திருவத்தியூ[ர்] நின்றருளின
3. அருளாளப்பெருமாளுக்கு மலைமண்டலத்து நாயக்கன்மாரில்ப் பள்ளி நாராயணன் கண்டநேன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு விட்ட சாவாமூவா பாற்பசு பத்தும் சினைப்பசு பத்தும் பொலிமறைநாகு பன்னிர[ண்]டும் இஷபம் ஒன்றும் ஆக உரு பத்து மூன்றுக்கும் னாள் ஒன்றுக்கு அளக்கும் அரிஎன்ன வல்லான்னாழியா
4. ல் நெய் உழக்கும் தயிரமுது நாழியும் திருநந்தாவிளக்காளும் திருநாள்

தேவைகளும் மற்றும் எப்பேர்பட்ட தேவைய்களும் சந்திராதித்தவரை செலுத்தக்கடவோமாகவும் இத்திருநந்தாவிளக்கு எரிய வைத்த திருக்குத்துவிளக்கு ஒன்றும் கைக்கொண்டு சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் பெருமாள்

5. கோயில்(த்)தானத்தோம் இவ்விளக்கு ஒன்றுக்கு கைக்கொண்ட சொற்கேளாக்கோன் வரந்தருவான் விளக்கு அரையும் ஆயப்பிள்ளை விளக்கு அரையும் ஆக விளக்கு ஒன்றும் கைக்கொண்டோம் இப்படிக்கு இவை சீயபுரமுடையான் ஆண்டா[ந்] அருளாளப்பிரியந் எழுத்து[॥*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1276
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	637/1918
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	166
அரசன்	:	விசையகண்டகோபாலன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் தாயார் சன்னதி நுழைவாயில் வலதுபுறச் சுவர்

குறிப்புரை : பல்லவக்குல சிற்றரசன் நல்லசித்தரைசன் என்பவன் அருளாளப் பெருமாள் கோயில் பெரியபிராட்டியார்க்கு (பெரிய தாயார்) திருத்தோள்மாலை இரண்டும், திருப்பள்ளித்தாமம் கொடுக்க காலியூர் கோட்டத்து படைப்பற்றான தேவப் பெருமாள் நல்லூரில் உள்ள 2 வேலி நிலத்தினை கோயிலில் திருமாலை தொடுக்கும் தாதநம்பி வசம் ஒப்படைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்டகோபாலதேவர்க்கு யாண்டு உமக வ்ருஷ்சிக நாயற்று வ௰
2. வ²வசுஷத்து ஹுதஶியும் செவ்வாய்கிழமையும் பெற்ற சுஶ்வதி நாள் பெருமாளுக்கு திருமாலை எடுக்கும் தாதநம்பிமார்க்கு
3. நல்லசித்தரைசனேன் பெரியபிராட்டியார்க்கு திருமாலையும் திருப்பள்ளித்தாமமும் எடுத்து பொதுவதாக நாம் விட்ட முன்பு தாங்க
4. ள் திருநந்தவனம் செய்து போந்த காலியூர்க் கோட்டத்து படைப்பற்றான தேவப்பெருமாள் நல்லாரில் கொல்லை நிலத்தில்(த்)
5. தாங்கள் திருநந்தவனம் செய்து போந்த ரு² உ வி இன்னிலம் இரண்டு வேலியால் வரும் கடமை ஆயம் பொன்வரி

6. உட்பட்ட அனைத்தாயங்களும் இழிந்து நாள் ஒன்றுக்கு பெரிய பிராட்டியார்க்கு எடுக்கும் திருத்தோள்மாலை இரண்டும் தி

7. ருப்பள்ளித்தாமமும் சந்திராதித்தவரை நடத்தி பொதுவதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வதாக

8. ச் சொன்னோம் இப்படிசெய்வதே இவை நல்லசித்தரைசன் எழுத்து வ இப்படி அனுபவிப்பதாக தானத்தாரும் குடுத்தோம்

9. இப்படி செய்வதே வ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 167**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1271
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	405/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	167

அரசன் : விசைய கண்டகோபாலன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெளிச்சேரியைச் சேர்ந்த குண்டூர் சிங்கப்பெருமாள் எனும் அபிநவபட்டபாணன் என்பவன் எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவத்தியூர் நின்றருளின அருளாளப்பெருமாளுக்கு வைத்த திருநந்தா விளக்கு ஒன்றினுக்காக 32 பசுக்களும் ஒரு காளையும் தானமளித்துள்ளான். இத்திருநந்தா விளக்கு ஒன்று எரிக்க தினமும் அரிஎன்னவல்லாநாழியால் நெய் உழக்கும் தயிர் நாழியும் அளக்க ஏற்பாடு செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[॥*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிஜயகண்(ட்)டகோபாலதேவற்க்கு யாண்டு உ௰க ஆவது கும்ஹநாயற்று பூர்வபக்ஷத்து த்ரயோதசியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற பூசத்து நாள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவத்தியூ[ர்] நின்றருளின அருளாளப்பெருமாளுக்கு வெளிச்சேரியில் குண்டூர் சிங்கப்

2. ப்பெருமாளான அபிநவ பட்டபாணன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்குவிட்ட பால்பசு பத்தும் சினைப்பசு பத்தும் பொலிமறை நாகு பன்னிரண்டும் ரிஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத்து மூன்றும் கைக்கொண்ட உதையக்கோன் அத்தி விளக்கு காலும் மணவாளக்கோன் திருவனும் முடிகொண்டக்கோன் க

3. ண்[ண]ந் விளக்குக் காலும் ஆண்டாந்கோன் இளையானும் பழுமடைகோன் தாதன் விளக்கு காலும் திருப்பாற்கடல் கோன் பெருமாளும் கண்ணக்கோன் பொற்கோயிற்பிள்ளையும் விளக்குகாலும் ஆக விளக்கு ஒன்றுக்கும் நாள் ஒன்றுக்கு அரிஎன்னவல்லாநாழியால் நெய்யுழக்குத் தயிரமுது நாழியுமளக்கவும் இத்திருந

4. ந்தாவிளக்கால் வந்த திருநாள்தேவைகளும் சந்திராதித்தவரை செலுத்திவிக்கக் கடவதாக சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் பெருமாள் கோயில் தானத்தோம் கணக்குச்[சீயபுர]முடைய வளையமழகியான் அருளாளப்பிரியன் எழுத்து உ

த.நா.அரசு தொல்லியல் துறை

தொடர் எண் :- 168

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1271
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	503/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	168
அரசன்	:	விசையகண்டகோபாலன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை மேற்குத் திருச்சுற்று மாளிகை.

குறிப்புரை : மலைமண்டலத்து கண்ணனூர் இராமநக்கன் என்பவனிடம் அருளாளப்பெருமாளுக்கு வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு 32 பசுக்களும், ஒரு காளையும் கோயில் தானத்தார் பெற்றுக்கொண்டு தினமும் நெய் உழக்கும், தயிர் நாழியும் சூரியன் சந்திரன் இருக்கும்வரை செலுத்துவோம் என உறுதியளித்துள்ளனர். மொத்தரஞ்சேரியைச் சேர்ந்த சுவர்க்க நாராயணன், எண்ணுள்ளூர் தேவன் நாராயணன், கண்ணனூரைச் சேர்ந்த ஒருவன் ஆகிய இம்மூவரும் சேர்ந்து ஐந்துநிலை கொண்ட திருக்குத்துவிளக்கு ஒன்றும், வெண்கலத்து தளி (தட்டு) ஆறும் கோயிலுக்கு அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ [॥*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிஜயகண்டகோபால தேவற்கு யாண்டு ௨௰௧ ஆவது கூ௱ஹ நாயற்று வ௭
2. வ௲வசஷத்து துவிதியையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உத்திரட்டாதிநாள் ஜயங்கொண்டசோழமண்டலத்து எயிற்
3. கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய (அருளிய) அருளாளப்பெருமாளுக்கு மலைமண்டலத்து நாயக்கன்
4. மாரில் கண்ணனூர் இராமநக்கந் வைத்த திருநந்தாவிளக்கு ஒந்றுக்கு பால்ப்பசுப் பத்தும் சினைப்பசுப் பத்தும் பொலிமுறைநா

5. கு பந்நிரண்டும் ஊஷஹம் ஒந்றும் ஆக உரு முப்பத்துமூந்றுக்கும் நாள் ஒன்றுக்கு அளக்கும் அரிஎன்னவல்லா நாழியால் நெய் உ

6. ழக்கும் தயிரமுது நாழியும் இத்திருநந்தாவிளக்கால் வந்த திருநாள்த்தேவைகளும் மற்றும் எப்பேற்ப்பட்ட தேவைகளும் சந்திராதித்த

7. வரை செலுத்தக்கடவோமாக சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் பெருமாள் கோயில்த்தாநத்தோம் இவ்விளக்கு கைக்கொ

8. ண்ட மணவாளக்கோன் திருவன் கைக்கொண்ட விளக்கு முக்கால் வண்டுவராபதிக்கோன் உடையாந் கைக்கொண்ட விளக்

9. குக் கால் ஆக விளக்க ஒந்றுக்கும் சீயபுரமுடையாந் வரன்தருவான் வளையமழகியாந்(த) ஆன அருளாளபிரியன் எழுத்து

10. மொத்தரஞ்சேரிச் சுவர்க்[க]நாராயணநும் எண்ணுள்ளூர் தேவந் னாராயணனும் கண்ணனூர் இராம . . . . .

11. த்து வைத்த ஐஞ்சு நிலைத்திருக்குத்துவிளக்கு ஒன்று வெண்கலத்து தளி ஆறு வ

த.நா.அ.தொல்லியல்துறை		**தொடர் எண் :- 169**	
மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 22
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1272
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 41/1893
மொழி	: தமிழ, சமஸ்கிருதம்	முன் பதிப்பு	: த.இ.கல்.தொ. IV கல். எண் : 859
எழுத்து	: தமிழ், கிரந்தம்		
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 169
அரசன்	: விசையகண்டகோபாலன்		

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் கருவறை சுற்றியுள்ள கீழ்ப்பகுதி

குறிப்புரை : புவிஆளப்பிறந்தான் ஆமூர் நீலகங்கன் என்பவன் வண்டுவரப்பெருமாள் எனும் பரிமேலழகிய பெருமாள்தாதன் என்பவனிடம் 30 பழம் புள்ளி மாடை என்னும் பணத்தினை அளித்து ஐந்நூறு குழி நிலத்தினை வாங்கியுள்ளான் இந்நிலத்தினை அருளாளப் பெருமாளுக்கு திருமாலை அளிக்க வேண்டி, திருநந்தவனமாக்கி திருமாலைப்புறமாக தானமளித்துள்ளான். வண்துவரை பெருமாள் என்பவன் வண்டுவர பெருமாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வண்மைமிக்க துவாரகை பெருமாள் என்பது இதன் பொருளாகும். "உவரா ஈகைத் துவரை" புறநானூற்று குறிப்பு ஒப்புநோக்கத்தக்கது. (வண்டுவரப்பெருமாள் எனும் பரிமேலழகிய பெருமாள்தாதன் என்பவர் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகரே என்று ஒரு கருத்து உண்டு)

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ:॥ *ஶிரஃஶாவடூநாயாய வ௱ஂவெ ஹூவாடூநொஃஷவ:* [।*] *நீடூஃஂஃநுவ: வ௲ா ஶாஃஃநுஃஷ்வா ஸ்ரீநடிஜவநஜ* உஸ்வஸ்திஸ்ரீ [॥*] திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்டகோபாலதேவர்க்கு யா
2. ண்டு உயஉ ஆவது கும்ப நாயற்று சுவரவக்ஷத்து தரதியையும் புதன்க்கிழமையும் பெற்ற அத்தத்தது நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து நகரம் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளின அருளாளப்பெருமாளுக்கு

3. புவிஆளப்பிறந்த ஆமுர் நீலகங்கனேன் திருமாலைப்புறமாகக் குடுத்த திருநந்தவனமாவிது கீழைத்திருச்சோலையில் பெரும்பூதூர் தாதர் திருநந்தவனத்துக்கு மேற்க்கு தேவன் மறையோர்த்தர் திருநந்தவனத்துக்கு

4. க் கிழக்குத் திருக்கலின்றி தாத[ர்] திருநந்தவனத்துக்கு தெற்கும் ஆற்றுக்கு வடக்குப்பட்ட வண்டுவராப்பெருமாளான பரிமேலழகிய பெருமாள்நாதன் தாதந் திருநந்தவனத்தில் வடக்கடையக் குழி ரூா இக்குழி ஐஞ்னூற்றுக்கும் இ

5. ப்பரிமேலழகியபெருமாள்தாதர்க்கு விலை நிச்செயித்துக் குடுத்த பழம்புள்ளிமாடை ௩௰ இம்மாடை முப்பத்துக்கும் இத்திருநந்தவனம் குழி ஐஞ்னூற்றுக்கும் கொண்டு பெருமாளுக்கு சந்திராதித்தவரை திருமாலையும் திருப்பள்ளித்தாம

6. மும் நாள்வழி தேவையும் திருநாள் தேவையும் முட்டாமல் செல்வதாக குடுத்தேன் புவி ஆளப்பிறந்த ஆ(ம்)முர் நீலகங்கநேன்[॥*]

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 23
வட்டம்	: காங்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1273
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 409/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 170
அரசன்	: விசைய கண்டகோபாலன்		

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் பாறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாளுக்கு மலைமண்டலத்து அரசு அதிகாரிகளில் மனையழிப்பரமேசுரன் என்பவன் ஒரு திருநந்தாவிளக்கு எரிக்க பன்னிரண்டு பசுக்களும் ஒரு காளையும் கொடையாக அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்஥ஸ்ரீ [।।*] திருவாய்க்கேழ்வி முன்பாகத் திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்டகோபாலதேவற்கு யாண்டு இருபத்து மூன்றாவது இஷப நாயார்[ற்]றுப் பூவ॰பக்ஷத்து சனிக்கிழமையும் ஏகாதெசையும் பெற்ற அத்தத்து நாள் செயங்கொ

2. ண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாளுக்கும் மலைமண்டலத்து நாயக்கன்மாரில் மனைய[ழி]ப்பரமேசுரனேன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு வைத்த திருக்குத்துவி

3. ளக்கு ஒன்றும் தேவா . ரடையான் சோலைக்கோன் வசம் விட்ட பாற்பசுப்பத்தும் சினைப்பசு பத்தும் பொலிமுறை நாகு பன்னிரண்டும் இஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத்துமூன்றும் கைக்கொண்டு நாள்ளொன்றுக்கு அளக்கும் அரியெ

4. ன்னவல்லான் நாழியால் நெய் உழக்கும் தயிரமுது நாழியும் நாள்த்தேவைகளும் சந்திராதித்தவரை செலுத்தக் கடவதாக சொல்லித்து இவை கோயிற் கணக்கு சீயபுரமுடையான் ஆயர்வுந்தன் தேவப்பெருமாள் [II*]

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : தெலுங்குச் சோழர்

அரசன் : விசையகண்டகோபாலன்

ஆட்சி ஆண்டு : 24

வரலாற்று ஆண்டு : கி.பி.1274

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 570/1919

முன் பதிப்பு :

ஊர்க் கல்வெட்டு எண் : 171

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்புரை : கண்டகோபாலர் அரண்மனை அந்தபுரத்தில் பணியும் பெண்களில் வங்கம்மை என்பவளின் மகள் பெருமாணாச்சி என்பவள் அருளாளப் பெருமாள் கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று எரிக்க 33 மாடுகளைத் தானமளித்துள்ளாள்.

கல்வெட்டு :

1. . . . . ஷேவற்க்கு யாண்டு உயசு வது மகர நாயற்று பூர்வபக்ஷத்து ஜூதியையும் புதன்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்க்கோட்டத்து

2. . . . . ளப்பெருமாளுக்கு நாயனார் கண்டகோபாலர் அகம்படிப்பெண்டுகளில் வங்கம்மை மகள் பெருமாணாச்சி வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்குவிட்ட பாற்த் பசுப்ப

3. . . . . கும் ஜஷஹம் ஆக உரு முப்பத்துமூன்றும் கைக்கொண்டு இத்திருநன்தா விளக்கு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு அளக்கும் அரியன்ன வல்லான் நாழியால் நெய் உழக்கும்

4. . . . . த்தவரை செலுத்தக்கடவதாக சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் பெருமாள் கோயில் (த) தானத்தோம் இதில் பழவளக்கன் மணவாளக்கோன் இளையான்

5\. . . . . சேபன்மேட்டு அரியான்கோன் மருமகன் இருள்னீக்கினான் கைக் கொண்ட திருவிளக்குஅ[ரை*]க்காலும் பள்ளிக்கட்டுக்கோன். . . . .

6\. . . . . கைக்கொண்ட திருவிளக்கு அரைக்காலும் திருமங்கலத்து பஞ்சக்கோன் கைக்கொண்ட திருவிளக்குகாலும்

7\. . . . . கைக்கொண்ட திருவிளக்கு அரைக்காலும் நெய்ய[ா]ற்று மா(க்)க்கரல் நம்பிக்கோன் கைக்கொண்ட திருவிளக்கு அரைக்காலும் ஆக திருநந்தா விளக்கு ஒன்று

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் :- 172**

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	31
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1281
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	500/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	: தமிழ்			
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	172

அரசன் : விசையகண்டகோபாலன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ளத் திருச்சுற்று மாளிகை மேற்கு பக்கம் கீழ்ப்பகுதி.

குறிப்புரை : காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாளுக்கு எயிற்கோட்டத்து நாயனார் பண்டாரிகளில் சிலாரப் பொன்னைய போயண்டன் என்பவன் ஒரு திருநந்தாவிளக்கெரிக்க மாடுகள் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்டகோபால தேவற்க்கு யாண்டு ௩௰௧ கஹி நா
2. யற்று வ௸வ்வசக்ஷத்து த்துதியையும் வியாழக்கிழமையும் பெற்ற விசாகத்து நாள் ஜயங்கொண்ட சோ
3. ழமண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து [தி]ருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமா
4. ளுக்கு இக்கோட்டத்து இம்மண்டலத்து நாயனார் பண்டாரிகளில் சிலாரப்பொன்னைய போயண்டன் திருநுந்தாவிள
5. க்கு ஒன்றுக்கு விட்ட பாற்பசு ௰௧ ம் சினைப்பசு அஞ்சினை நாகும் உரு ௰௧ ம் பெ[ப]ாலிமுறை நாகு ௰ ம் ஃஷஹம்
6. . . . . ஆக உரு . . . .

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1293
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	603/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	173

அரசன் : வீரகண்டகோபாலன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேகமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டத்து தன்கூற்று இராசராசபுரம் என்னும் ஊரிலுள்ள நன்தம்பாக்கிழான் பக்கன் உமையன் என்பவன் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளுக்கு வைத்த திருநந்தா விளக்கு ஒன்றிற்காக 32 பசுக்களும் ஒரு காளையும் தானமாக அளித்துள்ளான்

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீரகண்ட கோபாலதேவர்க்கு யாண்டு ௩ கும்ப நாயற்று சுவபரவசஷத்து தி திியையும் சனிக்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து
2. எயிற்(காட்டு)க்கோட்டத்துக் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளபெருமாளுக்கு வெண்குன்ற கோட்டத்து தன்கூற்று இராசராசபுரத்து நன்தம்பாக்கிழான் பக்க[ன்] உமையன் வைத்த திருநன்தாவிளக்கு
3. ஒன்றுக்கு திருநன்தாவிளக்குக்கு முடிகொண்டக்கோன் அரியான் விளக்கு கால் பட்டியக்கோன் அறபன் விளக்கு அரைகால் வடவாயில் வெண்ணைக்கூத்தன் விளக்கு அரைக்கால் அடிகேகோன் பெரியானும் மேற்ப்படி பெருமியும் விளக்கு மாகாணி துக்

4. கைக்கோந் விளக்கு மாகாணி சத்தபாடி இரவன் விளக்கு மாகாணி ஆதிமூலக்கோன் விளக்கு மாகாணி கச்சிராயக்கோன் உள்ளிட்டார் விளக்கு மாகாணி பாதாளி விளக்கு மாகாணி அலங்காரக்கோன் விளக்கு மாகாணி நெதியக்கோன் விளக்கு சிங்கன் விளக்கு மாகாணி ஆக திருநன்தா

5. விளக்கொன்றுக்கு விட்ட சாவாமூவாப்பால்பசு பத்தும் சினைப்பசு பத்தும் பொலிமறைநாகு பன்னிரண்டும் ஸஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத்துமூன்றும் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு அரியெனவல்லான் நாழியால் நெய் உழக்கும் தயிர்

6. அமுது நாழியும் இத்திருநன்தா விளக்கால்வந்த திருநாள்த்தேவைகளும் சந்திராதித்த(ை)வரை செலுத்தக்கடவர்களாவும் இத்திருநன்தா விளக்கு எரிய வைத்த எறும்புகாணித் திருக்குத்துவிளக்கு ஒன்றும் கைக்கொண்டு சிலாலேகை பண்ணிக்குடுத்தோம்

7. பெருமாள்கோயில தானத்தோம் இவை கோயிற் கணக்கு சீயபுரமுடையான் சேதிராயன் முதலி அருளாளப்பிரியன் எழுத்து உ

மாவட்டம் : காஞ்சிபுரம்

ஆட்சி ஆண்டு : 4

வட்டம் : காஞ்சிபுரம்

வரலாற்று ஆண்டு : கி.பி. 1294

ஊர் : காஞ்சிபுரம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 624/1919

மொழி : தமிழ்

முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : தெலுங்குச் சோழர்

ஊர்க் கல்வெட்டு எண் : 174

அரசன் : வீரகண்டகோபாலன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேகமண்டபத் மேற்குச் சுவர்

குறிப்புரை : பல்லவகுல சிற்றரசன் வீரகண்டகோபாலனின் மெய்க்கீர்த்தி முதலில் அமைந்துள்ளது. ஆனால் முழுவதுமாக இடம்பெறாமல் கல்வெட்டு சிதைந்துள்ளது. இம்மெய்க்கீர்த்தியில் இவன் பாரத்துவாசிக் கோத்திரத்தைச் சார்ந்தவன் என்றும் பல்லவர் குலத்தைச் சார்ந்தவன் என்பதையும் தெரிவிக்கிறது. திருநந்தா விளக்கு ஒன்று எரிக்க தானமளித்துள்ளான்

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] பார்த்தியர் தம்மிற் பாரத்துவாரக் கோத்திரம் விளக்க [மி] . . . .
2. லைமகள் வயிற்றில் நிலைபெறத் தோன்றி மெய்ம்மொழி நாள் முத . . . .
3. ணன் மாமகன்துய்ய மாதவத்தின் தராதலங்கு காக்கந்தன்மையனாகி . . . .
4. [ப்]பல்லவர் திருக்குலத் திசைதோறும் விளக்கும் விசையபூபதி கா . . . .

5. . ருளாளநாதனருள் பெரியவன் திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீரகண்ட .
. . . .

6. டு ச வது முதல் திருவத்தியூர் நின்றருளிய அருளாளபெருமாள் கோயிலில்
. . . .

7. மக்க[ளை]க் கோயிலில் [அ]ந்தராயபேறு கொள்ளுங் கடமை உள்ளிட்ட ெ
. . . .

8. . றாகச் சந்திராதித்தவரை திருநந்தாவிளக்கும் நெய்யமுது தையிரமுது .
. . . . . .

9. ருநாள்த் தேவைகளும் இவருளாளப்பெருமாளுக்குச் செலுத்தக் கடவ. . . .
. . . . .

10. ரொதம் பண்ணினவன் கெங்கைக்கரையில் காராம்பசுவை வதித்தான் ப. .
. . . .

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	13ஆம் நூ.ஆ.
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	44/1893
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கல்.தொ. IV கல். எண் : 859
எழுத்து	: தமிழ்			
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	175
அரசன்	: விசையகண்டகோபாலன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்று மேற்குச் சுவர்

குறிப்புரை : திருவத்தியூர் நின்றருளிய அருளாப்பெருமாள் கோயிலில் அமராபரணந் சந்திக்கு வேண்டிய வழிபாட்டிற்காக நிலம் ஒன்று தானம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தானம் வழங்கியவர் கங்க அரசன் அமராபரணன் சீயகங்கன். இவனை குவளாலபுர பரமேஸ்வரன், கங்ககுலோத்பவன், காவேரி வல்லபன் என்று புகழ்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்டகோபாலதேவர்க்கு யா . . . .
2. ஸ்ரீஸிஃ நாயற்று ஶஂவஉவசஷத்து ஏகாஉஶயும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற உத்தி . . . .
3. ஸ்ரீமற்க்குவளாலபுரபரமே[ஸ்வ]ரன் கங்ககுலோஹவன் காவேரிவல்லஹன் நஜிமிரிந . . .
4. கனேன் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாளுக்கு அமராபர[ண]ந்சந்திக்கு . . . .
5. ப்படிக்கும் வெ[வ]ஞ்ஜனபண்டா[ர]ம் கொள்ளவும் இவாண்டை ஆடிமாதம் முதல் புள்ளைந . . . .
6. யும் அனைத்தாயங்களும் உள்பட திருவிடையாட்டமாகச் சன்திராதித்தவரை செல். . . . .
7. ய்வதே இவை சீ[ய*]கங்கன் எழுத்து உ

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	654/1893
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	: தமிழ், கிரந்தம்			
அரசு	: தெலுங்கு சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	176
அரசன்	: அல்லுன் திருக்காளத்திதேவ மகாராஜா கண்டகோபாலன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்று வடக்குச் சுவர்

குறிப்புரை : திருக்காளத்திதேவ மகாராஜ கண்டகோபல தேவர் திருவத்தியூர் னாயனார் உகந்தருளிவிக்கிற பிள்ளை கோயிலை எடுப்பிக்கவும், அகரம் ஏற்படுத்தவும் திருநந்தவனம் அமைக்கவும் திருவத்தியூர் அகரம் கண்டகோபாலபுரத்திலுள்ள 3500 குழி நிலம், மனை, வீடு ஆகியவற்றை தானமாக அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. . . . . து பஞமியும் நாயற்று கிழமையும் பெற்ற மூலத்து நாள் னாயநார் அல்லும் திருக்காளத்திதேவ ஊஹாராஜ கண்டகோபாலன் ஷேவர் பண்டாரத்[தி]ற்க்கு [ஜயங்]கொண்டசோழமண்டலத்து எயிற்க்கோட்டத்து காஞ்சிபுரத்து திருவத்தியூர் னின்றஅருளின அருளாளப்பெருமாள் கோயிலில் ஸ்ரீவைஷ்ணவக் கண்காணி

2. . . . . .த்து பண்ணிக் குடுத்த பரிசாவது திருவத்தியூரில் னாயனார் உகன் த்தருளிவிக்கிற பி[ள்ளை]கோயிலுக்கும் யிக்கோயிலை சூழ வைக்கிற [அகர]த்துக்கும் திருநந்தவ[ன]த்துக்கும் ஸ்ரீஸேநாபதி விலையாக விற்றுக்குடுக்கிற நிலமாவது திருவத்தியூரில் அகரம் கண்டகோபாலபுரத்து கீழ் சிறகு மனையும் மனைபடப்பை

3. . . . . ர் பெருவழிக்கு தெற்க்கு பரிக்காறன் குழிக்கு மேற்க்கு ஆறுக்கு வடக்கு தென்கை வடகைய்கோல் ருயரு க்கு கீழ்மேல்கைய்கோல்

சய குழி உசுருா[அய] திருநந்தவனத்துக்கு பரிக்காறன் குழிக்கு கிழக்கு குழி கூா ம் ஆற்றுக்கு போகிற வதிபூரிலே கீழ்மேல்கைய்கோல் முக்கோல் வடகோல் நயந குழி வாச யம் வட

4. . . . . கோல் உய குழி . . ம் மொவ ுவாரி ஹூஶி[க்கு] பரிக்காறன் குழிக்கு தெற்க்கு தெற்க்கு விட்ட குழி ஊசய ஆககுழி நதுருா யிக்குழி ஶுநாபதி நதுருாம் விலையாக விற்றுகுடுத்து கொள்வதான எம்மில் மிசைத்த விலைபொருள் அந்றாடு நல்லபழங்காசு உய ஆவணப்களிக்காட்டி எறிகிழிறச் சிலவற கைய்கொண்டு

5. . . . . யிக்குழி நதுருா விலைகுறவிற்று பொருள் அறக்கொண்டு விலை வு ஊண கைய்சாத்து பண்ணிகுடுத்தோம் மிநிலத்தில் திருமுற்றத்துக் தென் வடகொல் . . கீழ்மேல்கோல் யச குழி நதுருய திருநந்தவனதுக்குக் குழி சா ஆக குழி எா௹ய யுக்குழி எா௹ய போய் நீக்கி அகரத்துக்கு செஷமான . . . . சயந

6. . . . . அகபடி ம் பிராதங்க(ள்)ளும் ஊநாதநமங்களு(க்)கும் உரிதாவதாகவும் ஒலை கு[ற்*]றம் எழுத்து பிழைவாசகம் அல்ல என்று சொல்லகடவதல்லவாகவும் மிருகாலாவதும் முக்காலாவதும் மி பழங்காசு நய யிக்குழி நதுருா குளம் ஶ்ரீ ஶுநாவதி விலைக்கு விற்று பொருள் அற கொண்டு விலைவு ஊண கைய்சா . . . . குடுத்தோம்

7. . . . . காணி செய்வார்களும் பதின்மரும் தாநத்தோமும் மிவனைவோம் இப்படிக்கிவைய் ஶ்ரீவைஷ்ணவக் கண்காணி பெருமாள் தாஸநேன் இவைய் என் [எ]ழுத்து இப்படிக்கிவைமண்டலத்து பச்சைவாரணஹட்டன் எழுத்து இவை பணியால் கோமல் கணக்கு அணிஞ்ச்சாந் சீயபுரமுடையா

8. . . . . இவை பதின்மரில் பெரியபெருமாள் நம்ப்பிய் எழுத்து இபடிக்கிவைய் பெரியபெருமாள் ஹட்ட எழுத்து இப்படிக்கிவை கருணாகரபட்டன் எழுத்து இப்படி அற்றிவேன் ஆள்கொண்ட பட்டநேன் இப்படிக்கிவை அருளாளஹட்டன் எழுத்து இப்படிக் கிவைய் சோதகிரய் அணியஅங்

9. . . . . இப்படிக்கிவை அருளாளஹட்டன் எழுத்து ஊமஶ ஸுவமதஶ வூணு ுவய்ந ஊஜஶ நா பெருமாள் ஶ்ரீயர ஹட்டஸு இப்படிக்கிவைய் வஜநாஹட்டஸு இப்படிக்கிவை தேவபிரான் வரத ராஜஹட்டன் எழுத்து உ.

த.நா.அரசு தொல்லியல் துறை   தொடர் எண் :- 177

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	28
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1244
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	508/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	177
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ளத் திருச்சுற்று மாளிகை வடக்கு பக்கம் கீழ்ப்பகுதி.

குறிப்புரை : நீலகங்கரையன் திருவேகம்பமுடையான் என்பவன் தன்னுடைய பெயரால் 'குமாரகோபாலன்' என்ற சன்தி ஒன்றினை திருவத்தியூர் அருளாளப்பெருமாள் கோயிலில் ஏற்படுத்தினான். இச்சன்திக்கு அமுதுபடி, சாத்துப்படி, வெஞ்சனம், அக்கரணை போன்ற தேவைகளுக்காக ஊற்றுக்காட்டுக்கோட்டத்து வல்லத்தரையன்சேரி கிராமத்தினை திருவிடையாட்டமாக இக்கோயிலுக்கு தானமளித்துள்ளான். இவ்வூரில் வசூலிக்கப்படும் கடமை ஆயம், காசு கடமை, பொன் வரி, நாட்டு வரி, காணிக்கை, களபட்டி, கார்த்திகைப்பச்சை, தறிஇறை, தட்டாரப்பாட்டம், பொதுமக்கள் பேர்க்கடமை, இனவரி, ஏரிமீன்பாட்டம், மாவடை, செக்குக்கடமை, புறக்கலனை மற்றும் அனைத்து வரிகளையும் இறை நீக்கி இவ்வூரினை திருவிடையாட்டமாக தானமளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] நீலகங்கரையன் திருவேகம்பமுடையா[ன்] ஓலை இருபத்தெட்டாவது தை மா[த*] முதல் நம்பேரால் கட்டின குமாரகோபாலன் சந்திக்கு அமுதுபடி சாத்துப்படிக்கும் வெஞ்சனத்துக்கும் அக்கரணை அமுது உள்ளிட்ட நிமந்தங்
2. களுக்கும் இட்ட ஊற்றுக்காட்டுக்கோட்டத்து வல்லத்தரையன்சேரி நான்கெல்லைக்கு உட்பட்ட விளைநிலம் கொல்லை நிலத்தில் மார்கழி

மாதவரையும் உள்ளூர் இறைஇலி தேவதானங்களாய்ப் போந்த நிலம் நீக்கி நின்ற நிலம் திருவிடை

3. யாட்டமாகக் குடுத்தோம் இவ்வூர்க்கு முத[லா]ம் கடமை ஆயம் காசு கடமை பொன்வரி நாட்டுவரி காணிக்கை [க]ளபட்டி குற்றம் கார்த்திகைப்பச்சை தறிஇறை தட்டாரப்பாட்டம் ஆசு பொதுமக்கள் பேர்க்கடமை இனவரி ஏரிமீன்

4. பாட்டம் மாவடை செக்குக்கடமை புறக்கலனை மற்றும் எப்பேற்பட்ட அனைத்து வரிகளும் ஆனைத்தாயங்களும் உட்பட முதலடங்க இறைஇலியாகக் குடுத்தோம் இன்னாள் முதல் இக்கோயில்த் தானத்தார்க்கே

5. [ற] இப்படியால் வந்த இறைகள் செலவாக்குவதாகவும் இப்படிக்கு இவ்வூர் நான்கெல்லை[யி]லும் திருவாழிக்கல்லு நாட்டிக் கொள்வதாகவும் சொன்னோம் இப்ப[டி] செய்வதே இவை திருவேகம்பமுடையான் எழுத்து [॥*]

த.நா.அரசு தொல்லியல் துறை   தொடர் எண் :- 178

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1342
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 485/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	: கிரந்தம் கலந்த தமிழ்		
அரசு	: பிற்காலப் பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	: 178
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ளத் திருச்சுற்று கிழக்கு பக்கம் கீழ்ப்பகுதி.

குறிப்புரை : பாண்டிமண்டலத்து சேரன்மகாதேவியைச் சேர்ந்த மதுசூதனன் ஆபத்சகாயன் எனும் இராமசந்திர தேவன் என்பவன் திருவத்தியூர் அருளாளநாதனுக்கு தினமும் மூன்று திருமாலைகள் சார்த்துவதற்காக இக்கோயிலைச் சார்ந்த பச்சைவர்ண தாதரிடம் எண்பது முளைப்பணம் கொடுத்து வெண்குன்றக் கோட்டத்து அனுக்காவூர் நாட்டு சளுக்கிபற்றில் கம்பன்தாங்கல் என்கிற ஆபத்சகாயநல்லூர் கிராமத்தில் நானூறு குழி நிலத்தினை வாங்கி திருநந்தவனம் செய்ய ஏற்பாடு செய்துள்ளான். இந்நிலத்தினை அளக்க 'நாட்டுக்கோல்' என்னும் அளவுகோலால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] தி ஹ வனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்க்கு யாண்டு ௰௩ க்கு எதிர் ௨ நாள் பாண்டிமண்டலத்து
2. சேரவன் மஹாதேவியில் [பேர்] மய ஸ ஊநன் சூபத்ஸகாயனான இ[ராம] சந்திரதேவன் பெருமாள் அருளாள
3. நாதனுக்கு நாள் ஒன்றுக்கு சாத்து திருமாலை மூன்றுக்கு இக்கோயில் தாதநம்பிமாரில் பச்சைவர்ண தாதர் பக்கல்
4. விட்டு முளைப்பணம் எண்பதுக்கு கெ[ா*]ண்ட திருநந்தவனஎல்லை கீழ்பார்க்கெல்லை நாராயணதாதர் கூற்றுக்கு மேற்க்

5. குதென்பார்க்கெல்லை தேவபெருமாள் நல்லூ[ர்]க்கு போகிறவதி வாய்க்காலுக்கு வடக்கு மேல்பார்க்கெல்லை

6. முப்பிடிநாயக்கன்தோப்புக்கு கிழக்கு ஆற்றுக்கு தெற்க்கு நாட்டுகோலால் குழி நானூறும் திருநந்தவனம் செ

7. ய்ய திருமடப்புறமாக விட்ட ஜயங்கொண்டசோழமணிமண்டலத்து வெண்குன்றகோட்டத்து அனுக்காவூர் நாட்டு சளு

8. க்கி[ப]ற்றில் கம்பன்தாங்கலான ஆபசுஸகாயநல்லூர் இன்னாள் முதல் அனைத்து வம[ு]மும் உள்ப்பட இறையிலி

9. ஆக சந்திராதிதூவரை அனுபவிப்பதாக . . . . . ள் த . . . ம எழுதுவித்து குடுத்தோம் [॥*]

மாவட்டம் : காஞ்சிபுரம்

ஆட்சி ஆண்டு : 15

வட்டம் : காஞ்சிபுரம்

வரலாற்று ஆண்டு : கி.பி.

ஊர் : காஞ்சிபுரம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 486/1919

மொழி : தமிழ்

முன் பதிப்பு :

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப் பாண்டியர்

ஊர்க் கல்வெட்டு எண் : 179

அரசன் : சடையவர்மன் சுந்தரபாண்டியன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ள திருச்சுற்று கிழக்கு பக்கம் கீழ்ப்பகுதி.

குறிப்புரை : நடுவின் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு திருநாவலூரில் உள்ள மன்றாடிகளில் திரபாரிக்கோன் தாயாண்டார் எனும் விழுப்பதரையன் என்பவன் திருவத்தியூர் அருளாளப் பெருமாளுக்கும், உலகுடைய நாச்சியார்க்கும் தினமும் நான்கு திருத்தோள்மாலைகள் சார்த்துவதற்காக வேண்டி, இக்கோயிலில் பணிபுரியும் ஆனைமேலழகிய பெருமாள் வசம் 36 பணம் கொடுத்து மாலைகள் சாத்த வழிவகைச் செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] கோறச்சடைபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தெவற்

2. கு யாண்டு ௰௫ க்கு எதிர் உ சித்திரை மாதம் நாள் நடுவின்மண்டலத்து திருமுனைப்பாடிநாட்டு திருநாவலூரில் மன்

3. றாடிகளில் தெ பாரிக்கோன் தாயாண்டாரான விழுப்பாதராயனேன் தொண்டைமண்டலத்து காலியூர் கோட்டத்து நகரங் காஞ்

4. சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாளுக்கும் உலகுடைய நாச்சியார்க்கும் நாலு திருத்தோள்மாலை

5. சாத்துகையில் இக்கோயிலில் தாதநம்பிமாரில் ஆனைமேலழகிய பெருமாளான கரியமாணிக்கத்தாழ்வார் நா

6. ள் ஒன்றைக்கு இ[ணை]க்காக இரண்டு திருத்தோள்மாலை சாத்தக்கடவராகவும் இத்திருத்தோள்மாலை சாத்தும் இடத்து இவற்கு விட்ட குடியே

7. . . . விடு . . . . . களில் திருநிலைக்கொண்டு . . . . நெடும்புளிக்கோன் அத்தியூர்கிழவர்

8. . . . . . . டக்கும் ஆண்டு ஒன்று . . என் . . . . த்த . . . . ஆட்டைவரைக்கு

[இ]றுக்கும் பணியும் முப்ப

9. [த்தாறும்] இப்பணம் முப்பத்தாறும் பற்றிக்கொண்டு திருமா . . . . இப்படிக்கு இவை விழுப்பாதராயர் எழு

10. த்து இப்படிக்கு இராசநாராயணக்கோன் எழுத்து இப்படிக்கு . . . . க்கோன் எழுத்து இப்

11. படிக்கு இவை செயங்கொண்ட சோழகோன் எழுத்து இப்படிக்கு இவை கோதண்டராயர் எழுத்து [இப்படிக்கு இவை] தொப்பச்சியன் எ

12. ழுத்து இப்படிக்கு இவை பாண்டிகுலராயன் எழுத்து இப்படிக்கு இவை . . . . அணிக்கோன் எழுத்து ஆவுடை நாயினா . . . .

த.நா.அரசு தொல்லியல் துறை

தொடர் எண் :-180

மாவட்டம் : காஞ்சிபுரம்

ஆட்சி ஆண்டு : 4

வட்டம் : காஞ்சிபுரம்

வரலாற்று ஆண்டு :

ஊர் : காஞ்சிபுரம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 477/1919

மொழி : தமிழ்

முன் பதிப்பு :

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப் பாண்டியர்

ஊர்க் கல்வெட்டு எண் : 180

அரசன் : (சுந்தரபாண்டியன்)

இடம் :

குறிப்புரை : அருளாளநாதனுக்கு மன்னனின் பேரால் 'வீரகேரள சன்தி'க்கும் திருநாளுக்கும் திருவிளக்குக்கும் வெஞ்சனத்துக்காகவும் 2388 பொன் அளித்து வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளான். மேலும் இச்சந்தி வழிபாட்டு நேரத்தின்போது உணவு உண்ணும் 33 பேருக்கு உணவளிக்க வேண்டி 396 பொன் அளித்துள்ளான். இதேபோன்று நாராயணன் அனந்தன் எனும் சுந்தரபாண்டியக் காலிங்கரயன் கட்டின சன்திக்கு 108 பொன்னும், தினமும் உணவு உண்ணும் 12 பேரின் உணவுக்காக 108 பொன்னும் அளித்துள்ளான். இதற்காக மொத்தம் 3000 பொன்னினை வெண்குன்றக் கோட்டத்து சளுக்கிப்பற்று நாட்டாற்கு அளித்து, இந்நாட்டில் அகரம் தவிர ஏனைய ஊர் வரி நீக்கி திருவிடையாட்டமாகக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] தி ௵ வனச்சக்கரவத்தி கோனேரின்மைகொண்டான் வெண்குன்றக் கோட்டத்து சளுக்கிப்பற்று நாட்டாற்க்கு பெருமாள் அருளாளநாதனுக்கு நம்பேரால்க் கட்டின வீரகேரளன் சன்திக்கும் திருநாளுக்கும் திருவிளக்குக்கும் படி வெஞ்சனத்துக்கும் பொன் இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்தெட்டும் ஊட்டுக்கு

2. நாள் ஒன்றுக்கு உண்ணும் பேர் முப்பத்து மூன்றுக்கு பொன் முன்னூற்றுத் தொண்ணூற்று ஆறும் நாராயணன் அனந்தனான சுந்தரபாண்டியக்

காலிங்கராயன் கட்டின சந்திக்குப் பொன் நூற்று எட்டும் இவர் ஊட்டுக்கு நாள் ஒன்றுக்கு உண்ணும் பேர் பன்[னி]ரண்டுக்கு பொன் நூற்று எட்டும் ஆக –

3. ப்பொன் மூவாயிரத்துக்கு தங்கள் நாட்டில் அகர நீக்கி உள்ள ஊர்களில் நான்கெல்லைக்கு உள்ப்பட்ட நஞ்சை புஞ்சை நத்தமும் நத்தப்பரப்பும் குளமும் காடுமேடுகள் மாநிலை மற்றும் எப்[பேற்ப்*]பட்ட ஸகலவ்ராஷ்டிகளிலும் கொள்ளும் நெல்வற்க்கமும் பொன்வற்க்கம் காசு கடமை மாவடை மரவடை புன்பயிற்க்கடமை

4. கடையாய சிற்றாயம் பேராயம் தறிஇறை செக்கிறை தட்டொலி தட்டாரப்பாட்டம் ஏர்வரி இநவரி இடைவரி பாசிப்பாட்டம் பஞ்சிபீலி சந்திவிக்கிரஹம் வாசல்வினிவோகம் காணிக்கை காத்திகைப்பச்சை ஓலை எழுத்து வினிவோக இலச்சி[னை]வினிவோகம் ஆனைச்சாலை குதிரைப்பந்தி மதிள்தேவை

5. வெட்டித்தேவை கூற்று இலக்கை கடைகூட்டு இலக்கை மற்றும் எப்பேற்ப்பட்ட உபாதிகளாலும் தேவைகளாலும் வரும் முதலும் இப்பற்றில் ஊர்களில் உள்ளூர் தேவதானம் திருவிடையாட்டம் பத்திலஞ்சு நீக்கி நின்ற முதலும் உள்ப்பட நாலாவ[து*] மார்கழி மாத முதல் முதலடங்கத் திருவிடையாட்ட

6. மாகக் குடுத்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இப்பற்று ஊர்களில் நான்கெல்லைகளிலும் திருவாழிக்கல்லும் நாட்டுவித்துக் கொண்டு சந்திராதித்தவற் செல்ல திருவிடையாட்டம் ஆசுக்கடமையும் இறுத்துப் பொதுக: தகூஞூ ॥ இவை பாண்டிமண்டலத்து இரணியமுட்ட நாட்டு

7. வெளச்சியூருடையான் எழுத்து இவை திருவந்தபுரமுடையான் சு[ந்தரபா]ண்டிய காலிங்கராயன் எ[ழு]த்து யாண்டு ச நாள் ாகூயஉ ॥

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் :- 181**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	494/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	181
அரசன்	:	–			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ளத் திருச்சுற்று தெற்குப் பகுதி.

குறிப்புரை : அருளாளநாதன் கோயிலில் மகாபலி வாணராயர் என்பவர் எழுந்தருளுவித்த நாயனார் பகையற முடிசூடு பெருமாளின் திருமேனி வழிபாட்டிற்காக அமுதுபடி, சாத்துப்படி, திருப்பரிவட்டம், திருவிளக்கு, திருமாலை ஆகியவற்றிற்காக ஊற்றுக்காட்டுக் கோட்டத்து கீழ்துண்டத்தில் திரையனூர் பிடாகை குலோத்துங்கசோழ விளாகம் என்னும் ஊரினை இறை இழித்துத் தானமாக இம்மன்னன் வழங்கியுள்ளான். இது மன்னனின் நேரடி ஆணையாக கோயில் தானத்தாற்கு அனுப்பப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திரிபுவனசக்கரவத்தி கோனேரிமேல்கொண்டான் அருளாளநாதன் கோயில் தாநத்தார் கண்டு தங்கள் கோயிலில் மஹாவலி[வாண]ராயர் எழுந்தருளிவித்த நாயனார் பகையறமுடிசூடு பெருமாளுக்கு அமுதுபடி சாத்துப்படி திருப்பரிவட்டம் திருவிளக்கு திருமாலை உள்ளிட்ட நித்தநிமந்தங்களுக்கு விட்ட ஊற்றுக்காட்டு

2. க்கோட்டத்து கீழ்துண்டத்தில் திரையனூர்ப் பிடாகை குலோத்துங்கசோழ விளாகம் [நான்]கெல்லைக்கு உள்ப்பட்ட நஞ்சை நிலம் புன்சை நிலம் உள்பட பல தளி பத்தில் ஐஞ்சு நீக்கி உள்ள முதல் பன்இரண்டாவது மாசிமாதம் முதல் முதல் அடங்க இறையிலி ஆகக்குடுத்தோம் இன்நாள்முதல் சன்திராதிராதித்தவரை செல்வதாக கல்லிலும் செம்பிலும்

3. வெட்டிக்கொள்ளுவதாகச் சொ[ல்*]லிவிட்டோம் இது நான்கெல்லைக்கு உள்ளு திருவாழி ஆழ்வாரை எழுந்தருளுவித்துக்கொண்டு தங்களுக்கேறக் கடமைகுடிமை செலவறுப்பித்துக்கொள்க இவை நரிக்குடி உடையானெழுத்து இவை பல்லவராயன் எழுத்து : யாண்டு ௰௨ ள் ௩ா௨௰௨ :-

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 487/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	: தமிழ்		
அரசு	: பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 182
அரசன்	: –		

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறையைச் சுற்றியுள்ளத் திருச்சுற்று தெற்குப் பகுதி.

குறிப்புரை : நெட்டூருடையான் இளையாழ்வான் காலிங்கராயர் அருளாளப்பெருமாள் கோயிலில் எழுந்தருளுவித்த திருவாழி ஆழ்வார்க்கு அமுதுபடி, சாத்துப்படி, தினசரி வழிபாடு, திருப்பணிகளுக்காகவும் இவர் பிறந்த சித்திரை நாளில் அருளாளநாதனுக்கு மாதந்தோறும் சிறப்பு அமுதுக்காகவும் நிலம் தானமளித்துள்ளான். வெண்குன்றக்கோட்டத்து இரும்பேடு நாட்டு உத்திரமேரூர் பற்றில் உள்ள ஆலத்தூர் கிராமத்தின் வரியினை நான்கு பங்காக பிரித்து ஒரு பங்கினை சித்திரை நாளில் சிறப்பு வழிபாடு செய்யவும், மீதியுள்ள மூன்று பங்கினை இவன் எழுந்தருளுவித்த திருவாழி ஆழ்வார் வழிபாட்டிற்கு திருவிடையாட்டமாகவும் அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] திரிபுவநசக்கரவத்தி கோனேரின்மைகொண்டான் பெருமாள் அருளாளநாதன் கோயில் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நெட்டூருடையான் இளையாழ்வான் காலிங்கராயர் இக்கோயிலில் எழுந்
2. தருளுவித்த திருவாழி ஆழ்வார்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கும் திருப்பணிக்கும் இவர் பிறந்த நாள் சித்திரையிலே பெருமாள் அருளாளநாதன் மா
3. தந்தோறும் சிறப்பு அமுது செய்யவேண்டும் நித்தநிமந்தங்களுக்கும் உடலாக வெண்குன்றக்கோட்டத்து இரும்பேடு நாட்டில் உத்த[ர]மேலூர் பற்றில்

ஆலத்தூரில் நாலிட்டு ஒரு கூறு சித்திரைச் சிறப்புக்கும் நீக்கிநின்ற முக்கூறும் திருவா

4. மிஆழ்வார்க்கு திருவிடையாட்டமாகவும் இவ்வூர் நான்கெல்லைக்கு உள்ப்பட்ட நஞ்சைய் புஞ்செய் ஏரி ஏரிவாய்ப் புறவடை நீர்நிலை மாநிலை உள்ப்பட்ட ஸஊஷவ ாவதியும் உள்

5. ப்டப் பதின்மூன்றாவதின் எதிராமாண்டு புரட்டாசி மாத முதல் முதலடங்க இறைமிலியாக தன்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவகஃ செல்ல

6. கல்லிலும் செம்பிலு[ம்*] வெட்டிக்கொள்க த ஷஒ இவை நெட்டூருடையான் எழுத்து யாண்டு ய௩ எதிராமாண்டு நாள் எய௬ இவை நெட்டூருடையான் தேவச்சிலையான் இளையாழ்வாரா

7. ன காலிங்கராயன் எழுத்து உ

த.நா.அரசு தொல்லியல் துறை			**தொடர் எண் :- 183**	
மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 493/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 183
அரசன்	:	–		
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில்		

குறிப்புரை : நெட்டூர் உடையாழ்வான் காலிங்கராயர் என்பவர் இக்கோயிலில் எழுந்தருளுவித்த நாயநார் எம்பெருமாநார் திருமேனி வழிபாட்டிற்கானக அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்ட தினசரி வழிபாட்டிற்காகவும், கோயில் பணிகளுக்காகவும், இக்கோயில் மடத்தில் அமுது செய்யும் ஜீயர் வேண்டும் அமுதுபடிக்காகவும் நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கோயிலில் 'ராமானுஜிய பாஷ்யம்' (பிரும்ம சூத்ர பாஷியம்) உரை விளக்கம் செய்வதற்காக வேண்டியும் நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது. உத்திரமேலூர் பற்றில் சிறுகோழி, போசன்பட்டு ஆகிய ஊர்கள் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டுள்ளன. இதே பற்றிலுள்ள 'பெருங்கோழி' என்னும் ஊரின் பத்தில் ஒரு பங்கினை 'இராமானுஜிய பாஷ்யம்' நூலினை உரை விளக்கம் செய்வதற்காக 'பாஷ்ய விருத்தியாக' அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பங்கினை மடத்தில் அமுது செய்யும் ஜீயர்களுக்கு அமுதுபடிக்குத் தேவையான வெஞ்சனத்துக்கு நிதி ஆதாரமாக (முதலாக) வைத்துக்கொள்ளவும் அளிக்கப்பட்டுள்ளது. இவன் இக்கோயிலில் திருவாழி ஆழ்வார் திருமேனியினை எழுந்தருளுவித்து நிலம் தானம் வழங்கியதை க.எண். 182 தெரிவிக்கிறது. இரண்டு தானங்களுக்கும் ஒரே நாளில் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[‖*] திரிபுவநச்சக்கரவத்தி கோநேரின்மைகொண்டான் பெருமாள் அருளாளநாதன் கோயிலில் திருப்பதி ஸ்ரீவெஷ்ணவர்களுக்கு நெட்டூர் உடையான் இளையாழ்வான்

2. காலிங்கராயர் இக்கோயிலில் எழுந்தருளுவித்த நாயநார் எம்பெருமாநார்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கும் திருப்பணிக்கும் இக்கோயிலில்

3. மடத்து அமுதுசெய்யும் ஜீயர்க்கு அமுதுபடிக்கும் வேண்டும் வெஞ்சனத்துக்கும் இக்கோயிலில் வ்ருவித்தீப்பிக்கும் ராமாநுஜீய ஹாஷ்யத்துக்கு ஹாஷ்யவ்ருத்திக்கும் உடலாக உத்

4. தரமேலூர்ப்பற்றில் சிறுகோ[ழியும் எரு] . . . போசன் [பட்டும்] எம்பெருமாநார்க்கு திருவிடையாட்டமாகவும் பெருங்கோழியில் பத்தில் ஒன்று ஹாஷ்யவ்ருத்திக்கு நீக்கி நீக்கி உள்ளது மட

5. த்தில் அமுதுசெய்யும் ஜீயர்களுக்கு அமுதுபடி உள்ளிட்டு வேண்டும் வெஞ்சநத்துக்கும் உடலாகவும் இவர்கள் நான்கெல்லைக்கு உள்பட்ட நன்செய் புன்செய் ஏரி மரம் புறவடை நீர்நிலை

6. மரநிலை உள்ப்பட்ட ஸமஸ்த வ்ராவ்திகளும் உள்பட பதின்மூன்றாவதின் எதிராமாண்டு புரட்டாசி மாத முதல் முதலடங்க இறைமிலியாக தன்தோம் இப்படிக்கு இவ்வோலைபிடிபாடாகக் கொண்

7. டு சந்திராதித்தவர் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க : – தாஷூ – இவை நெட்டூருடையான் எழுத்து யாண்டு யரு எதிராமாண்டு நாள் எயகூ இவை நெட்டூருடையா

8. ன் தெய்வச்சிலையான் இளையாழ்வாரான காலிங்கராயன் எழுத்து [॥*]

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 17
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1232
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 371/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 184

அரசன் : (மூன்றாம் இராசராசன்?)

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் பாறைக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : திருவத்தியூர் அருளாளப்பெருமாள் கோமில் தினசரி வழிபாட்டிற்காக மாகறல் நாட்டு ஆற்பாக்கம் என்னும் கிராமத்தினை தேவதான இறையிலியாக கொள்ள இக்கோயில் ஸ்ரீவயிஷ்ணவக் கண்காணி செய்பவர்களுக்கும் வரிக்கூறு செய்பவர்களுக்கும் மன்னன் நேரடி ஆணை வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. திருமுகப்படி திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மைகொண்டான் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து திருஅத்தியூர் அருளாளப்பெருமாள் கோயில் ஸ்ரீவயிஷ்ணவகக்கண்
2. காணி செய்வார்களுக்கு இவ்வாழ்வார்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக இன்னாட்டு மாகறல் நாட்டு ஆற்பாக்கம் பதினேழாவது பசான முதல் தேவதான இறையி
3. லியாக இடக்கடவதாகச் சொல்லி இப்படி கணக்கிலும் இட்டுக்கொள்ளக்கடவர்களாக வரிக்கு கூறு செய்வார்களுக்கும் சொன்னோம் இவ்வூர் பதினேழாவது பசா
4. ன முதல் தேவதான இறையிலியாக கைக்கொள்க எழுதினான் திருமந்திர ஓலை நெறியுடைச்சோழ மூவேந்தவேளான் இவை குருகுலராயனெழுத்து இவை நி கரிலி சோழப்
5. பல்லவரையனெழுத்து இவை நீலகங்கரையனெழுத்து இவை பிருதிகங்கரைய னெழுத்து இவை சோழ கங்கனெழுத்து இவை வன்னாடுடையானெழுத்து யாண்
6. டு யஎ ஈ நாருயரு

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1242
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	402/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	185
அரசன்	: (மூன்றாம் இராசராசன்?)			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : அருளாளப்பெருமாள் கோயில் வழிபாட்டுச் செலவிற்காக சோமங்கலம் எனும் இராசசிகாமணிச் சதுவேதிமங்கலத்திலுள்ள உள்ளூர் தேவதானம் நீக்கியும், இவ்வூர் பிடாகை புதுச்சேரி கிராமத்தில் நீலகங்கரையனுக்கு அனுதாரமான நிலம் நீக்கி ஏனைய 137¼ நிலத்தின் வரிவருவாய் பெற்றுக்கொள்ள வேண்டுமென இக்கோயிலை நிர்வகிக்கும் ஸ்ரீவயிஷ்ணவக்கங்காணி செய்பவர்களுக்கு அரசன் நேரடி ஆணை வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. திருவாய்க்கேழ்வி முன்பாகத் திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து [திரு]அத்தியூர் நின்றருளின அருளாளப்பெருமாள் கோயிலில் ஸ்ரீவயிஷ்ணவக் கண்காணிசெ
2. ய்வார்களுக்கு இந்த அருளாளப்பெருமாளுக்கு வேண்டும் நிவந்தங்களும் இறுப்பதாக முன்பு தேவதானமாக இடச்சொன்ன நெல்லுப் பதினாயிரக் கலத்துக்கும் வேண்டும் நிலம் உ
3. ட்பட்ட இன்னாட்டில் சோமங்கலமான இராசசிகாமணிச்சதுவேதிமங்கலத்து உள்ளூர் தேவதானமான நிலமும் இராசரா[ச*] நீலகங்கரையன் அனுதாரமான பிடாகை புதுச்சேரியும்

4. நீக்கித் திறப்புநிலம் நூற்றுமுப்பத்தேழேகாலும் இருபத்தாறாவது நாள் எழுபத்தொன்பது முதல் தேவதான இறையிலியாக இடவும் இன்னிலத்துக்கு [ஒ]ட்டுப்படி நெல்லுக்கும் ஆயமும் அந்தராயமும் சுற்[றி] இ

5. றுத்து வ[ரு]கிற நெல்லும் புன்ப்பயிரால் காசுகடமையும் அருளாளப்பெருமாளுக்கு இறுக்கவுங் கடவுதாகச் சொல்லி இப்படி கணக்கிலும் இட்டுக்கொள்ளக்கடவர்களாக வரிசெய்வார்களுக்குச் சொன்னோம் இவ்வூர் இருபத்தாறாவது நா

6. ள் எழுபத்தொன்பது முதல் தேவதான இறையிலியாக கைக்கொள்க எழுதினார் திருமந்திர ஓலை நெ[ந]றியுடைச்சோழ மூவேந்தவேளான் இவை வில்லவராயன் எழுத்து இவை வன்னாடுடையான் எழுத்து இவை விழிஞைத்தரையன் எழுத்து இவை பங்

7. களத்தரையன் எழுத்து இவை விழுப்பாத[ராய]ன் எழுத்து இவை தொண்டைமான் எழுத்து [॥*]

மாவட்டம் : காஞ்சிபுரம்
ஆட்சி ஆண்டு : 29

வட்டம் : காஞ்சிபுரம்
வரலாற்று ஆண்டு : கி.பி. 1240

ஊர் : காஞ்சிபுரம்
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 623/1919

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்
ஊர்க் கல்வெட்டு எண் : 186.

அரசன் : திரிபுவனகோனேரின்மைகொண்டான்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேகமண்டபத் மேற்குச் சுவர்

குறிப்புரை : தொண்டைமண்டலத்து உத்திரமேலூர் மாவணடூர் பற்று, அந்தப்பற்று, அழியுடைதாங்கப் பற்று, பிரமதேசப் பற்று, அண்ணமாங்கலப் பற்று, முக்தமங்கலப் பற்று, செஞ்சிமலைப் பற்று, குவளகோட்டுப பற்று, வயலைக்காவூர் பற்று, மதுராந்தக வடபிடாகை தென்பிடாகை, ஊற்றுக் காட்டு கோட்டம், நீர்வேளூர் நாடு, கூவப்பற்று, மற்றும் உள்ளிட்ட பற்றுகளில் அருளாளப் பெருமாள் கோயிலுக்கு திருநந்தா விளக்கு எரிக்க ஆடு மாடுகள் மேய்த்து கோயிலில் விளக்கு எரிக்கும் திருவிளக்கு குடிமக்கள் இப்பற்றுகளில் ஊருக்கு பொதுவாக உள்ள நிலங்களில் ஆடு மாடுகள் மேய்ப்பதற்கு வசூலிக்கப்படும் வரிகளை நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் திருவத்திகிரி நின்றருளிய அருளாளப்பெருமாளுக்குக் கோயிற் திருவிளக்குக் குடிமக்களுக்குத் தொண்டைமண்டலத்து [உத்திரன்மேறூர்]
2. மாவண்டூர்ப் பற்றிலும் அந்தப்பற்றிலும் அழிபடைதாங்கிப் பற்றிலும் பிரமதேசப் பற்றிலும் அண்ணமங்கலப் பற்றிலும் முக்தமங்கலப் பற்றிலும் செஞ்சிமலைப் பற்றிலும் குவளைகோட்டுப் பற்றிலும் . . க்க ப் பற்றி[லு]ம் . . .

3. ப் பற்றிலும் வயலைக்காவூர் பற்றிலும் மதுராந்தக வடபிடாகை தென்பிடாகையிலும் ஊற்றுக்காட்டுக் கோட்டத்திலும் நீர் வேளூர்நாட்டிலும் கூவப் பற்றிலும் மற்றும் உளிட்ட [பற்றி]லும் அருளாள[ப்பெ]

4. ருமாள் திருச்சுரபியான ஆடும் மாடுகள் மேய்த்து பாலமுது நெய் அமுது தயிர் அமுது திருவிளக்குத் திருநாட் தேவைகளும் முன்பு தாங்கள் போக்கறுக்கும் படி போக்கறு . .

5. ப்பொதுவார்களாகவும் இவை மேயும் இடங்களில் இப்பற்றுகள் பிடித்தவர்கள் இவையிற்றுக்குப் புறகூட்டுகொள்ளக்கடவர்களல்லவாகவும் தந்[மா] நலிவுசெய் . .

6. தொழிவார்களாவும் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை

மாவட்டம் : காஞ்சிபுரம்

ஆட்சி ஆண்டு : 10

வட்டம் : காஞ்சிபுரம்

வரலாற்று ஆண்டு :

ஊர் : காஞ்சிபுரம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 515/1919

மொழி : தமிழ்

முன் பதிப்பு :

எழுத்து : தமிழ்

அரசு : –

ஊர்க் கல்வெட்டு எண் : 187

அரசன் : –

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னதி நுழைவு வாயில் இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமையாக இல்லை. புலியூர் கோட்டத்து பல்லாவரத்தில் (தற்போதைய பல்லாவரம்) இருக்கும் உலகளந்த சோழக்கோன் என்பவன் திருஅத்திஊர் ஆழ்வாற்கு திருநந்தாவிளக்கு ஒன்று வைக்க 96 ஆடுகள் அளித்து, திருநாராயணன் என்னும் அளவையால் தினமும் உழக்கு நெய் வழங்கிட ஏற்பாடு செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. . . . . ண்டு பத்தாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயில் கோட்டத்து திருஅத்திஊர் ஆழ்வாற்கு புலிஊர்க் கோட்டத்து பல்லாபுரத்து இருக்கு மன்றாடி நம்பி கொம்மன் ஆன உலகளந்த சோழக்கோன் வைத்த

2. . . . . ல் திருவாலி செந்தாமரைக்கண்ணனும் பற்மநா[ப*]ன் இராசுமசெலவந் கூத்தனும் உள்ளிட்டார் கைக்கொண்ட திருவிளக்காடு சூயகூ ம் தொண்ணூற்று ஆறும் கைக்கொண்டு திருநாராயணத்தால் நாள் ஒன்றுக்கு நெய் உழக்காக

3. . . . . க்கொண்டமைக்கு

த.நா.அ.தொல்லியல்துறை

தொடர் எண் :- 188

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி.14–15 நூற்.
ஊர்	: காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 618/1893
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	: தமிழ்		
அரசு	:	ஊர்க் கல்வெட்டு எண்	: 188
அரசன்	:		

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேகமண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை : மாடந்தூர் ஊரைச் சேர்ந்த வணிகர் பெருங்குறும்பூர் தழுவக்குழைந்தான் வாணாதராயன் என்பவன் திருவத்தியூர் அருளாளப்பெருமாளுக்கு திருவாரதனை செய்யும் நம்பிமாரில் கெருடன் மேலழகியார் வசம், தன்னுடைய பெயரில் வைக்கும் நந்தா விளக்குக்காக 33 பசுக்கள் தானமளித்துள்ளான். மேலும் பெருமாளுக்கு திருமாலை சாத்த வேண்டி உத்திரவேதி அழகியார் வசம் 500 குழி நிலம் அளித்து திருநந்தவனமாக திருத்தி திருமாலை வழங்கிட வழிவகைச் செய்துள்ளான்.

கல்வெட்டு :

1\. . . . . யூர் கோட்டத்து மாடந்தூர் வணிகர் பெருங்குறும்பூர் தழுவக்குழைந்தான் வாணாதராயன் குடுத்த ஸ்ரீஅருளாளநாத பெருமாளைத் திருவாராதநம் பண்ணும் நம்பிமாரில் தம்முடைய [ஆ]சார்யம் ஆன புண்டவத்தநத்துக் கெருடன் மேலழகியார் நம்முடைய பேராலே நடத்தும்த் திருவிளக்கு ஒன்று இதுக்கு நான் விட்ட பசுநடை உரு முப்பது ரிஷபம் யொன்று ஆக உரு ௩௰௧ இது கொண்டு நாள்தோறும் திருவிளக்கு நடத்தக்கடவராகவும் கரவருஷம் முதல் வாணாதராயர் திருக்கைவேலழகியார் பெருமாளுக்குக் கட்டளையான தளிகையொன்றுக்கு நம்முடைய

2\. . . . . டய பேராலே நடக்கும் திருமாலைக்கு வடகரை திருச்சோலை இல் படுகை கூ ருா இக்குழி அஞ்னூறும் கொண்டு உத்தரவேதி அழகியார் வசத்திலே திருநன்தவாநமாக குடுத்து திருமாலை நடத்தச் சொன்னோம் யிந்த ஸ்ரீஉம் ஆசந்த்ராக்கஸ்தாயியாக நடக்கும்படிக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்குடுதோம் இப்படிக்கு இவை வாணாதராயர் எழுத்து [॥*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-நூற்.
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	595/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	189
அரசன்	:	–			

இடம் : அருளாளப்பெருமாள் கோமில் அபிஷேக மண்டபத்துக் கிழக்குச் சுவர்

குறிப்புரை : இளம்பிலாக்காட்டு நாயக்கர் என்பவர் இத்திருமண்டபத்தை செய்வித்துள்ளார். இத்திருமண்டபத்தின் பெயர் 'சுவரமாதேவன்' என்பதாகும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] இத்திருமண்டபஞ் செய்வித்தார் இ
2. ளம்பிலாக்காட்டு நாயக்கர்[ர்] இத்திருமண்டபத்தின்
3. பேர் சுவரமாதேவன் [॥*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 190**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	430/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	-			
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	190
அரசன்	:	-			

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறைக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : பாடலாக இயற்றப்பட்டுள்ளது. காலிங்கற்கோன் என்பவன் கரிய திருமுகிற்(திருமால்) இறைவனுக்கு பொன்னாலான பூனூல் மற்றும் 10 திருநந்தாவிளக்கு வைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஐய்யன்மலநணி யத்தியூர் மன்நு செ[ய்]யக் கரியதிருமுகிற்கு வைய்யமெலாம் தன்னூல் வழியபையன் தாங்கச்செய காலிங்கன் பொன்னூல மைத்தான் புரிந்து
2. நன்தாத நல்விளக்கு நாலிரண்டு மொரிரண்டு[ம]ஊாமரைக் கண்ணற்க்கத்தியூர் வந்தாங்கடைத்தான் பழக்கத்டல் வேந்தராற்றல் சமைத்தான் கலிங்கர்கோன் தான் [॥*]

"ஐய்யன்மலந் அணியத்தியூர் மன்நு
செய்யக்கரிய திருமுகிற்கு – வைய்யமெலாம்
தன்னூல்வழியபையன் தாங்கச்செய் காலிங்கன்
பொன்னூலமைத்தான் புரிந்து"

"நந்தாநல்விளக்கு நாலிரண்டு மோரிரண்டு
மந்தமரைக் கண்ணற்கத்தியூர் – வந்தாய்
கமைத்தான்பழக்க த்தடல் வேந்தராற்றல்
சமைத்தான் கலிங்கர்கோன் தான்"

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	35
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1213
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	430/1919
மொழி	:	தமிழ், சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழும் கிரந்தமும்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	191
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில் ஆனந்தாழ்வார் தெற்குக் குமுதம்.			
குறிப்புரை	:	கீழைக்கங்க மன்னன் சீயகங்கன் அருளாளப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் திருஆனந்தாழ்வார் சன்னதியை கட்டியச் செய்தியைக் கூறுகிறது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஜாதஸ்வாஸெநு ஸிம்ஹக கூஷி: திதஷ திஷகாககும்–ம்ஸெஸகவிஶாக ஸஸ்ரீகொஜியகம்கவு–யி தவு–ய ஶாஹொஶ யொஶெ கூாவொஸதி வூாவகத கெஶ: கூரிஶிரிதஉ

2. ஸெவிநஶெஷநா– உநூாநாமெநு–ஸ–யகீநு ஶஶெஹஉவஷயஜிஉஉெ ஸ்ரீவிஉாநஉ . உ ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட

3. ருளி வீராஹிஷேகமும் விஜயாஹிஷேகமும் பண்ணியருளிய திரிஹுவந வீரதேவற்கு நயரு வது ஸ்ரீமக குவளாலபுரபரமேஶவரன் கங்ககுலோற்ஹவன் சோளேஷிர சிங்க

4. ன் சீயகங்கன் சிறைமீட்ட பெருமாள் சீயகங்கன் திருவனந்தாழ்வார் கோயில் செய்தார் உ

SUMMARY

1. On the right wall, inside of the Narasiṁhavaśvāmi shrine in the Aruḷāḷap perumāḷ Temple-Tamil-Chōḻa-Rājādhi Rāja I-r.y.32 (1050 C.E.). Begins with the historical introduction "திங்களேர்தரு"etc. The inscription is highly damaged and is incomplete. Records the gift of an ear-ornament and of sheep for a perpetual lamp to the god Tiruvattiyūr-Āḻvār by Seṭṭi-Rājamāṇikkattār alias Nuḷambamādēviyar, the daughter of Ayyaṉ-śettiyār, the headman of Koḻavāmaṅgalam in Arumoḻidēva-vaḷanāḍu. Her full name is give Jayaṅgoṇḍa-śōḻa Viranuḷambamādēviyār.
2. On the south wall of the rock in the Aruḷāḷap perumāḷ Temple-Tamil-Chōḻa Kulottunga-I. r.y.3 (1073 C.E.). Gift of land as dēvadāna to the temple of Tiruvattiyūr Āḻvār.
